மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 13 ★ 28-7-57 சென்னை ★ விலை 16 காசு

அரசாங்கச் சிக்கனம்!

—(0)—

புரையோடிய புண்ணுக்கு புனுகு பூசினல் போதாது.

—(0)—

ஊரில் பெரிய சாப்பாட்டுராமன் என்று பெயரெடுத்தவன் சகாதேவன். விருந்து என்ருல் சகாதேவனை அங்கு பார்த்துக் கொள்ளலாம். அதிலும் சுவையான சாப்பாடென்ருல், அளவுகூடத் தெரியாமல் வயிற்றை அடைத்துவிடுவான், நாவின் சுவைக்காக. வயிறு தாங்கவேண்டுமே! வயிற்றுவலி வாந்தி இப்படிச் சிலசமயங்களில் வயிறு ஒத்துழையாமை புரியும்.

வயிற்றுவலி தோன்றும்பொழுது, "இனிமேல் அதிகம் சாப்பிடக்கூடாது" என்று சகாதேவன் தீர்மானிப்பான். ஆனல் சாப்பாட்டுநேரம் வந்ததும் அந்தத் தீர்மானங்களெல்லாம் பறந்துவிடும். மீண்டும் வயிற்றுவலி வந்து வாட்டும்.

"வயிற்றுவலி, சரியாகச் சாப்பிடமுடியவில்லை!" என்று வைத்தியரிடம் போய்க் காட்டினன்.

"காலையில் என்ன சாப்பிட்டாய்?"

"இட்லி!"

"இட்லி ஒன்றும் செய்யாதே! எத்தனை இட்லி சாப்பிட்டாய்?" வைத்தியர் கேட்டார்.

சகாதேவன் யோசித்தான். "பத்து இட்லி!" என்று எண்ணிச் சொன்னன்.

"பத்து இட்லியா?"

"அதற்கு மேலிருக்காது!"

பத்து இட்லி அதற்குமேல் "அலவன் சாக" எவ்வளவு சாம்பார், சட்டினி, மிளகாய்ப்பொடி, எண்ணெய் உள்ளே போயிருக்கும்.

"அவ்வளவு இட்லிகளை ஒருதடவையில் சாப்பிட்டால் என்ன ஆகும்? ஐந்து இட்லிகளுக்குமேல் சாப்பிடாதே!" என்று வைத்தியர் சொன்னர். சகாதேவன் பெரிய மனக்குறையோடு அதை ஒப்புக்கொண்டு போனன்.

ஒருவாரம் கழித்து சகாதேவனுக்கு வயிற்றுவலி வந்துவிட்டது. வைத்தியர் அழைக்கப்பட்டார்.

வைத்தியர் வந்ததும் முதல் கேள்வியாக "காலையில் எத்தனை இட்லி சாப்பிட்டாய்?" என்று கேட்டார்.

"ஐந்து இட்லி!"

வைத்தியர் அதைக்கேட்டுத் திருப்தி பட்டார். "எப்பொழுது சாப்பிட்டாய்?" என்று பேச்சுக்குக் கேட்டுவைத்தார்.

"பத்துமணிக்கு!"

"அப்படி ஏன் நேரங்கழித்துச் சாப்பிடுகிருய்?"

"அதுவரைப் பசியில்லை!"

வைத்தியருக்கு ஆச்சரியமாயிருந்தது. திடீரென்று சாப்பிடும் அளவு குறைக்கப்பட்டதும் பசி போயிற்றென்ருல், அது கவனிக்கப்படவேண்டியதுதான்!

"காலையில் படுக்கையைவிட்டு எழுந்ததும் பசி இருக்கிறதா?"

"இருக்கிறது."

"அதற்கு என்ன செய்கிருய்?"

"முன்பெல்லாம் வெறுங் காபி சாப்பிடுவேன்"

"இப்பொழுது?"

வெறுங் காபியுடன் ஆறு இட்லிகள் சாப்பிடுகிறேன்!"

ஒரேதடவையில் பத்து இட்லிகளைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தவன், எண்ணிக்கையைக் குறைக்கச் சொன்னதும் முதலில் ஆறு இட்லியும் இரண்டாவதாக ஐந்துமாக, மொத்தம் பதினேரு இட்டிலிகளைக் காலிசெய்ய ஆரம்பித்துவிட்டான்!

* * *

சாப்பாட்டைக் "குறைத்துக்" கொண்ட சகாதேவன் கதையைப் போல, செலவைக் குறைக்க இந்திய அரசாங்கத்தினர் எடுத்துக்கொள்ளும் சிக்கன நடவடிக்கைகள் இருக்கின்றன.

வயிற்றுவலி எடுக்கும் பொழுது சாப்பாட்டைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் சகாதேவனுக்கு உண்டானது போல, பொருளாதார நெருக்கடி உண்டாகும் பொழுது செலவைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கிறது. பின்பு சாப்பாட்டு நேரத்தில் சகாதேவன் பழைய சகாதேவனுகி விடுவது போல, செலவு என்று வரும்பொழுது அரசாங்கத்தின் பழைய போக்கு அப்படியே இருக்கிறது.

சிக்கனம் என்ற பேச்சு வந்ததும் பிரதமர் பண்டித நேரு பெரிய வீட்டிலிருந்து சிறிய வீட்டுக்குப் போகப் போவதாகக் கூறினர். குடியரசுத் தலைவரும் மந்திரிகளும் தங்கள் சம்பளத்தில் பத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொண்டார்கள்.

(12-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. சபையைப் பார்வையிடும் அண்ணா!

"மானிடர் குடும்பம்" என்ற கண்காட்சியை அறிஞர் அண்ணா அவர்கள் பார்வையிட்டபொழுது எடுத்த படம், படத்தில் அன்பழகன், கோவிந்தசாமி, அண்ணா, விக்கின்ஸ் (அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்தி நிலையத்தைச் சேர்ந்தவர்) செழியன், சுந்தரேசன் முதலியவர்களைக் காணலாம்.

சட்டமன்றத்தில் ஜனநாயகம்

—(0)—

தோழர் அன்பழகன் பேச்சு.

—(0)—

சென்னை சட்ட மன்றத்தில் 15-7-57ல் சட்ட மன்ற செயலகம் பற்றிய விவாதத்தின்பொழுது தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் வழங்கிய கருத்துரை.

சட்டமன்றத் தலைவர் அவர்களே! சட்ட மன்றத்தினுடைய நிர்வாகத்தைக் குறித்தும், அது தொடர்பானவை பற்றியும், இப்பொழுது பல நண்பர்கள் பேசுவதற்கான வாய்ப்பு இந்த மான்யத்தில் கிடைத்திருக்கிறது.

கருத்துக்களிலே மாறுபாடு ஏற்படுகிறபோது, நாங்கள் தெரிவிப்பதை, அரசியல் அடிப்படை தெரியாமல், அரசியல் கருத்துக்கள் முழுவதும் அறியாமல் பேசிவிடுகிற கருத்துக்கள் எனறு, சகலகலாவல்லவர்கள் யாரோ சிலர் இருப்பதைப் போலவும், மற்றவர்கள் சாதாரண கலைகளைக்கூட, பெரும்பாலான கலைகளும் அடியோடு அறியாதவர்கள் போலவும் பேசுகின்ற முறை, மற்றக் கட்சிகளை, மதிப்பதாகாது என்று மந்திரிகளுககு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

உண்மையாகவே, அரசியல் கருத்துக்களில் சில கருத்துக்கள் தவறான கருத்துக்களாகத்தான் தோன்றக்கூடும். நாஙகள் சில கருத்துக்கள் தெரியாதவர்களாகக் காணப்படலாம். நமுடைய வீட்டில் நம்முடைய மனைவி நமக்கு ஊற்றுவது, சாதாரண நெய்யாக இருந்தாலும், அது வாசனை உடையதாகத் தெரியும். அடுத்த வீட்டிலிருந்து வந்த நெய்யாக இருந்தால், அது-சிலருக்கு வாசனை குறைவுடையதாகத் தெரியும். அதுபோல், மற்றக் கட்சிகள் சொல்லுகிற கருத்துக்கள் தங்களுக்கு உடன்பாடு இல்லாத காரணத்தாலே, அரசியல் முழுவதும் அறியாமல் இப்படிப்பேசி விடுகிறார்கள் என்ற கருத்தில் பேசுவது, ஜனநாயகப் பண்பாடு வளருவதற்கு உதவாது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஜனநாயகத்தை வளர்ப்பதற்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை அல்ல, முக்கியமான காரணம். உறுப்பினர்களுடைய தரம்தான் மிகவும் முக்கியமான காரணம். சட்டமன்ற உறுப்பினர்களின் தரம் ஒரு நாட்டிலே வளர வேண்டுமெனில் இரண்டு மாற்றுக் கட்சிகள் ஒன்றோடொன்று மோதவேண்டும். மோத மோதத்தான்-கருத்து அலைகளிலே மோதி-ஆளுகிறவர்களை மோதுவது அல்ல, அப்படி நாங்கள் கருதமாட்டோம்-கருத்து அலைகள் ஒன்றோடொன்று மோதி அதிலிருந்து ஜனநாயக விழிப்பு வளர்ந்து, உறுப்பினர்களுடைய தரம் உயர்ந்து, ஜனநாயகத்தினுடைய தரம் ஓங்க முடியும். அந்த முறையிலே எதிர்க் கட்சியிலிருந்து மோதுகிற கருத்துக்கள் ஆளும் கட்சியினரின் கருத்துகளுக்கு மாறுபட்டிருக்குமேயானால், அதை மட்டுமே அவர்கள் எண்ணிப் பார்த்து பதில் தெரிவிக்க வேண்டும்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புவேன்-எதிர்க் கட்சி உறுப்பினர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், அது தகுதிக்குறைவு அல்ல. அவர்கள் சார்ந்திருக்கிற லட்சியங்கள் நாட்டு மக்களுக்குத் தேவைப்படுமானால், அந்தச் சிறிய எண்ணிக்கை பெரிய எண்ணிக்கை ஆக நாள் ஆகாது. ஆகவே, அந்தச் சிறிய எண்ணிக்கையாக அவர்கள் இருக்கும்போதே, கவனிக்கவேண்டிய கருத்துக்களைக் கவனிப்பது, ஆளும் கட்சியினுடைய பொறுப்பு என்பதை அவர்கள் உணரவேண்டும்.

இந்த நாட்டிலே சட்ட மன்றம் இருப்பது, பொது மக்களுடைய கருத்தைப் பிரதிபலிக்க. பொது மக்களுடைய கருத்து உருவாவது-தெருக்களிலும், சாதாரணப் பொது இடங்களிலும் 'நடைபெறும் பொதுக் கூட்டங்களிலேதான். இப்படிப்பட்ட கூட்டங்கள் நடத்துவதற்காக, சென்னைப் போன்ற நகரங்களில், பல இடங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது. ஜனநாயகத்தை வளர்ப்பதற்குப் பொதுக் கூட்டங்கள் இன்றியமையாதவை. அமைச்சர்கள், வரும்போது பள்ளிக்கூடங்களும் திறந்து விடப்படுகிறது-அவர்கள் அரசியல் கருத்துக்களைப் பேசுவதாக இருந்தாலும் கூட. ஆனால், எதிர்க்கட்சியினர் தெருவோரங்களில் கூட்டங்கள் கூட்டிப் பேசுவதாக இருந்தாலும், 'நடைபாதையில் போக்கு-வரத்துக்கு வசதிக் குறைவு ஏற்படுகிறது' என்று சொல்லி, எங்கே கூட்டம் போடுவதாக இருந்தாலும் மறுத்துவிடுகிறார்கள் போலீஸ் அதிகாரிகள். தங்கள் கடமையை நிறைவேற்றுவதற்காகத்தான் அவர்கள் மறுக்கிறார்கள். ஆனால், ஜனநாயகம் இதனால் பாதிக்கப்படுகிறது, என்பதை எண்ணிப்பார்த்து அந்த அளவுக்குப் பொது மக்களுக்காகக் கூட்டம் போடும் உரிமையேனும் ஆளும் கட்சியினர் நாட்டினருக்கு உண்டாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழலோசை!

பெருநாட்டுக் குடியானவச் சிறுவன் குழலூதுங் காட்சி. இந்தப் படம். "மானிடர் குடும்பம்" என்றக் கண்காட்சியின் முக்கிய படமாகக் கொள்ளப்பட்டது. சென்ற வார மன்றத்தில் இது பற்றிய கட்டுரை வந்துள்ளது.

அது போல், ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால், ஒவ்வொரு பகுதியிலுமுள்ள மக்கள், எந்தெந்தக் கருத்துக்களை எண்ணுகிறார்களோ, அவைகளை உடனடியாகத் தெரிவிப்பதற்கான வாய்ப்பும், அவைகளைத் தெரிவித்தவுடனே உடனடியாகக் கவனிப்பதற்கான முறைகளும் அரசியலிலே வளர வேண்டும். சட்டமன்றத்திலே பேசப்படுகிற கருத்துக்கள்-எதிர்க்கட்சிக்காரர்கள் பேசினார்கள், நாம் ஏதோ பதில் சொன்னோம், என்று முடிந்து விடாமல், என்ன என்ன கருத்துக்களைச் சொல்லி, அமைச்சர் எப்படிப்பட்ட பதிலைச்சொல்லி இருந்தாலும், அந்தப் பதில் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். அதைக் கூட உறுப்பினர்களைக் கொண்டு நியமிக்கப்பட்டிருக்கிற 'அஷ்யுரன்ஸ் கமிட்டி' மட்டும் கவனித்தால் போதாது, அமைச்சர்களும் உடன் இருந்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குறிப்பாகச் சொல்வேன்: 'உறுதி மொழிக் கமிட்டி'க் கூட்டத்திற்கு அதன் உறுப்பினரே பெரும்பாலும் வர முடிவது இல்லை, அவர்களுக்கு உள்ள வேறு வேலைகள் காரணமாக. அதற்கு வராவிட்டாலுங் கூட, உறுதி மொழியாகத் தெரிவித்தவைகளை அரசாங்கத்துறையிலே உள்ளவர்கள் நிறைவேற்றினார்களா என்பதை, அவர்களுக்கு உள்ள பொறுப்பு காரணமாக, கவனித்தால்தான் ஜனநாயகம் வெற்றி பெறுமே அல்லாது, அமைச்சர் தரும் கருத்துக்களை அரசாங்கத்திலே உள்ளவர்கள் நிறைவேற்றாமல் இருக்கின்ற வரை ஜனநாயகம் வெற்றி பெறாது. மூன்று, நான்கு ஆண்டுகளாகவே-சில கருத்துக்கள்-சாதாரண குறைபாடுகள் பற்றிய உறுதிமொழிகள் கூட நிறைவேறாமல் இருக்கின்றன.

அடுத்து, சட்டங்கள் நன்றாக உருவாவதற்கு மேல்சபை இன்றியமையாதது என்ற கருத்து எல்லோருக்கும் உடன்பாடு அல்ல. மேல்சபை என்று, தனியாக, இருப்பது கருத்துக்களைப பரிமாறிக் கொள்வதற்குத் தேவை; மிகப் பெரிய விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; மேதாவிகள் இருக்கிறார்கள்; அவர்களுடைய கருத்துக்களை அறிவிப்பதற்கு மேல்சபை தேவையே என்று சொல்வதானால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு. இன்ன இன்ன துறையைச் சார்ந்தவர், இன்ன இன்னாரால் தேர்ந்தெடுக்கப் பட்டவர், இன்ன இன்ன தனிப்பட்ட பிரிதிநிதித்துவம் உடையவர் என்று குறிப்பிட்டு, அவர்களுக்கு இந்தச் சட்டமன்றத்திலேயே இடம் கொடுத்தாலும் கொடுத்துவிடலாம், நூற்றுக்குப் பத்துப்பேர் என்ற அளவிலேனும். ஆனால், அதைவிட்டு, அவர்களுக்காக ஒரு தனி மன்றம், அவர்களுக்கென தனி அலுவலகம் என்று இருக்கத்தான் வேண்டும் என்பது உண்மையிலேயே சற்று வியப்பாக இருக்கிறது. கவர்னர் பதவியைக் குறித்துப் பேசிய இந்த நேரத்திலே பொருத்தம் ஆகாது என்று அதைக் குறித்து மறுத்துப் பேசிய முறையிலேயே மேல்சபையைப் பற்றி குறிப்பிடுகிற கருத்துக்கும் மறுப்பு எழலாம். ஆனால், மேல்சபையின் பயனைப் பெறுவதற்கு இந்தச் சட்ட மன்றத்தாலே முடியும். இந்தச் சட்ட மன்றத்திலேயே அவர்களில் எத்தனை பேருக்கு இடம் தரவேண்டுமா, அத்தனை பேருக்கு இடம் தரலாம்.

அது மாத்திரம் அல்ல. இன்றைய தினம் உள்ள சட்ட மன்றம் செம்மையாக இயங்குவதற்கு-ஆட்சி நடத்துவதற்கு தனித்தனி குழுக்கள் அமைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளலாம். எந்தக் கட்சி

(11-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 28—7—57 சென்னை

கல்வித்துறையில் குழப்பம்!

இந்திய அரசியலாருக்கும் மாநில அரசாங்கத்தினருக்கும் கல்விபற்றி திட்டவட்டமான கருத்துக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. மற்றத்துறையில் இருப்பதைப் போன்ற குழப்பமான நிலையே அங்கும் நீடிக்கிறது.

இந்திய உபகண்டத்தில் எழுத்தறிவு இல்லாதவர்கள் தொகை ஏராளம். 100க்கு 85 அல்லது 90 பேர் கல்வியறிவு பெறாதவர்கள். ஆக நாட்டு மக்களுக்குக் கல்வியறிவு தர, திட்டங்களைப் போடுகிறார்கள், தற்பொழுதுள்ள கல்வி முறையில் மாறுதல்களைக்காண விரும்புகிறார்கள். கல்வியறிவைப் பரப்பவேண்டுமென்ற குறிக்கோளை யாரும் குறைகூறமுடியாது. ஆனால் ஏதாவது ஒரு திட்டத்தைப் போடவேண்டும், ஏதாவது ஒரு மாறுதலைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் செயலாற்ற ஆரம்பித்தால் புதிய குழப்பந்தான் உண்டாகிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களைப் போடும்பொழுதும், பெரும் ஆலைகள் அணைக்கட்டுகள் மின்சார நிலயங்கள் இவைகள் தேவை என்று நினைக்கும்பொழுதும், விஞ்ஞானிகளும் தொழில் நிபுணர்களும் தேவைப்படுகிறார்கள். ஆக விஞ்ஞானக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து, தொழிற் கல்லூரிகளையும் விஞ்ஞான ஆராய்ச்சி கூடங்களையும் ஏற்படுத்த அரசாங்கத்தினர் முயல்கின்றனர்.

ஐந்தாண்டுத்திட்டம், தொழில்வளர்ச்சி இவைகளைப் பற்றிப் பேசம்பொழுது விஞ்ஞானக் கல்வி பற்றிய கவனம் அரசாங்கத்துக்கு வருகிறது.

ஆனால் காங்கிரசுக் கட்சியின் கோட்பாடுகளைப் பற்றிப் பேசும்பொழுது ஆதாரக் கல்வி பற்றிய கவனம் வருகிறது.

ஒருபுறம் விஞ்ஞானக் கல்வி அவசியம் என்கிறார்கள், மற்றொரு புறம் ஆதாரக் கல்விதான் நமது கல்வி முறைக்கு அடிப்படை என்கிறார்கள்.

ஆகக் கல்வித்துறையில் அரசாங்கத்திற்குத் தெளிவான அடிப்படைக் கருத்து இல்லாமற் போய்விட்டது. இரண்டையும் கலந்து ஒரு புது முறையை உண்டாக்கவும் முடியாது.

கல்வித்துறையில் திட்டங்களைப் போடுவதற்கு முன்னும், மாற்றங்களைச் செய்வதற்கு முன்னும், முதலில் நமது நாட்டுக்கு எத்தகையக் கல்விமுறை வேண்டும் என்பதை முடிவு செய்துவிடவேண்டும்.

அரசமரத்தடியில் உட்கார்ந்து கூடைமுறம் கட்டுவது போதுமென்றால், அணுசக்தி உலையைப்பற்றி நாம் பேசக்கூடாது; மின்சார ஆராய்ச்சிகளைச் செய்யவேண்டிய அவசியமிருக்காது, இரும்பு ஆலைகள் அமைப்பது பற்றியோ, எஃகு உற்பத்தி அதிகரிப்பது பற்றியோ திட்டமிடத் தேவையில்லை.

"ஒருபுறத்தில் விஞ்ஞானத்திலும் தொழில் வளர்ச்சிப் படிப்பிலும் கவனம் செலுத்தி, மற்றொரு பக்கத்தில் ஆதாரக் கல்விதான் அடிப்படைத் திட்டம் என்று கூறுவதில் பொருள் விளங்கவில்லை" என அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை சட்டசபையில் கல்வித்துறையில் உள்ள குழப்பத்தைச் சுட்டிக்காட்டினார்கள்.

அதற்குக் கனம் சுப்பிரமணியம் அவர்கள் தந்த பதில் குழப்பத்தை இன்னும் அதிகமாக்குவதாகவே உள்ளது. "ஆதாரக் கல்வித்திட்டத்தை நமக்கு வேண்டிய முறையில் மாற்றியமைத்துக்கொள்ளலாம்" என்ற பொருள்பட அவர் பேசியுள்ளார். ஆதாரக் கல்வியின்மீது எழுகிற குறைபாடுகளுக்குச் சமாதானம் கூறவேண்டுமானால் அந்த வாதம் பயன்படலாம். ஆனால் ஆதாரக் கல்வி என்றால் அது ஒரு திட்டவட்டமான முறையாக இல்லை என்பது வெளியாகிறது. நாம் நினைத்த வகையில் மாற்றஞ் செய்துகொள்ளலாம் என்று சொன்னால் என்ன பொருள்? வைத்திருக்கிற திட்டம் இன்னும் சரியான உருவம் எய்தவில்லை! இன்னமும் சரியாக உருவாகாத, விளக்கப்படாத ஒரு கல்வி முறையை மனதில் வைத்துக்கொண்டு இப்பொழுதுள்ள கல்வி முறையை மாற்ற நினைப்பது, இருக்கிற சிறிதளவு ஒழுங்கையும் முன்னேற்றத்தையும் தடைப்படுத்துவதாக முடியும்.

கதரா, கைத்தறியா, மில்துணியா என்பதில் அரசாங்கத்துக்கு விளக்கமான கொள்கை இல்லாததுபோல், கல்வித்துறையிலும் ஆதாரக் கல்வியா, இருக்கின்ற முறையா, விஞ்ஞானப் படிப்பா என்பதில் விளக்கமான கொள்கை இல்லை.

கல்வித்துறையில் அடிக்கடி மாறுதல்களைச் செய்வது நல்லதல்ல. அதிலும் மிகக் குழப்பமான அடிப்படையை வைத்து அதன்மீது கல்வி முறையை மாற்ற நினைப்பது ஆபத்தானதாகும். அதில் திட்டம் வெற்றி பெறுமா தோல்வி யடையுமா என்ற கேள்வியல்ல, வெற்றி பெற்றாலும் தோல்வி யடைந்தாலும், அவர்களுடைய வீண் ஆராய்ச்சிகளால் இலட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய எதிர்காலம் பாழாக்கப்படுகிறது.

கல்வித்துறையில் அடிக்கடி ஏற்படுத்துகிற மாற்றங்கள், கட்டுகிற கட்டிடத்தின் அடிப்படைச் சுவரை மாற்றிப் போடுவது போலிருக்கிறது. எப்படிப்பட்ட வீடு வேண்டும் என்பதை முடிவு செய்துகொண்டு, வீட்டைக் கட்ட ஆரம்பிக்கவேண்டும், அதற்குப்பதில் கட்டிடத்தை ஆரம்பித்துவிட்டு, அடிப்படையை மாற்றக்கூடாது. மேலும், கட்டப்போகும் வீட்டைப் பொறுத்துதான் அடிப்படைப் போடவேண்டியிருக்கும். ஓலைக்கூரை, மண்சுவர் என்றால், சிறிய அளவில் அடிப்படை போடப்பட்டால் போதுமானது. நாலடுக்கு மாளிகை என்றால் அதைத் தாங்கக்கூடிய அளவுக்கு கனமான அடிப்படை போடவேண்டும். நமது அரசாங்கத்தினர் என்ன செய்கிறார்களென்றால், மண் குடிசைக்கு வேண்டிய அடிப்படையைப் போட்டு நாலடுக்கு மாடி கட்டுவதற்கான முயற்சியைச் செய்கிறார்கள்! ஆதாரக் கல்வியில் ஆரம்பித்து அணுச்சக்தி ஆய்வுக்கூடத்தை அமைப்பது என்பது முடியாத காரியம்!

ஆதாரக் கல்விக்குப் பலவிதமான விளக்கங்கள் தரப்படுகின்றன, தெளிவாக வரையறுத்து யாரும் கூறவில்லை. பொதுவாக, ஆதாரக் கல்வி என்றால் புத்தகப் படிப்பைக் குறைத்து, தொழில்களைக் கற்றுக்கொள்வதன்மூலம் கல்வியறிவு தரப்படுவது என்று கூறுகிறார்கள். கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள்கூட ஆதாரக் கல்வியைப்பற்றிக் கூறும்பொழுது "வெறும் புத்தகம் மூலமாக

(10-ம் பக்கம் பார்க்க)

வினா: திராவிட முன்னேற்றக் கழகத்தார் நாசவேலைக்காரர்கள் என்றும் கருத்துப்பட, திராவிட நாட்டுப் பிரிவினையை நாசவேலை என்றும், அத்தகைய நாசவேலையைக் கண்டு தாம் சகிக்கமுடியாது என்றும் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சென்னை சட்டமன்றத்தில் பேசியுள்ளாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: திராவிட நாட்டுப் பிரிவினை நாசவேலை என்று கனம் சுப்பிரமணியம் அவர்கள் சென்னை சட்டசபையில் கூறினார். தோழர் சுப்பிரமணியம் சென்னை மாநிலத்தின் நிதிமந்திரியாக மட்டுமல்ல, மாநிலத்தின் மதி மந்திரியாகவும் இருக்கிறார். கல்வித்துறை அவரது பொறுப்பின் கீழ் விடப்பட்டிருக்கிறது. கல்வித்துறையில் பொதுவாகவும் சிறப்பாக விஞ்ஞானம் தர்க்கம் ஆகிய தனிப் பகுதிகளிலும், ஒரு முடிவைக் கூறும்பொழுது, அந்த முடிவு வருவதற்கானக் காரணங்களையும் கூறியாகவேண்டும். காரணங்களைக் கூறாமல் முடிவை மட்டும் வெளியிட்டால் அப்படியே யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். என்ன காரணத்தால், அந்த முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது என்பதை முதலில் விளக்கவேண்டும். கொடுக்கப் பட்ட காரணங்கள் சரியாக இருந்து, காரணங்களிலிருந்து தொடர்ந்து பார்த்தால் அந்த முடிவுக்குத் தான் வருவதைத் தவிர வேறு வழி இல்லை என்றால் தான், அந்த முடிவு ஏற்றுக் கொள்ளப்படும்.

காரணங்கள் தரப்படாத முடிவு, ஒருவருடைய சொந்தக் கருத்தாகுமே யன்றி, அரசியல் உலகில் ஏற்றுக் கொள்ளப் படவேண்டிய முடிவாகாது.

தோழர் சுப்பிரமணியம் அவர்கள் கோபதாபங்களுக்கு அடிக்கடி ஆளாகும் தன்மையுடையவர், உணர்ச்சிவயப் பட்டுப்பேசிவிடுவார். அதிலும் ஆளுங்கட்சியில் ஒரு முக்கியமானவராக, மாநில மந்திரியாக, சட்டசபையின் முதல்வராக அமைந்துள்ள அவர் அதிகாரம் உண்டாக்கும் ஆணவத்துக்கும் இலக்காகி விடுகிறார். சட்டமன்றத்திலும்சரி, பொதுமன்றத்திலும்சரி, மாற்றார்க்குக் கொடுக்கவேண்டிய மதிப்பைக் கொடுக்காமல், யாரையும் மதிக்காமல், அரசியல் கண்ணியத்தையும் பொதுவாழ்வுக்கான நாகரிகத்தையும் மறந்து, தம்மை ஒரு சர்வாதிகாரியாக எண்ணிக்கொண்டு அவர் எதிர்கட்சியினரைப் பற்றிக் குற்றங்குறை கூறுகிறார். அந்தப் பேச்சுகளில் ஆத்திரமும் அறியாமையும் காணப்படுகின்றனவே யன்றி அறிவின் விளக்கமோ, உண்மையின் பொலிவோ காணப்படவில்லை.

கனம் சுப்பிரமணியம் அவர்களின் பேச்சில் அவர் கொண்டுள்ள கோபத்தின் வெம்மை தெரிகிறது, அறிவின் ஒளி தெரியவில்லை.

எரிச்சல் தெரிகிறது, வெளிச்சத்தைக் காணோம்.

புகைச்சல் தெரிகிறது ஒளியைக் காணோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்பது ஆண்டு வரலாற்றைப் பார்த்தால், அறிவு பரப்பும்-அன்பு ஊட்டும்-ஆக்கம் பயக்கும் பணிகளை அது செய்துவந்திருப்பதைத்தான் காணமுடியுமேயல்லாமல், தண்டவாளத்தைப் பெயர்ப்பதையோ-தந்திக்கம்பியை அறுப்பதையோ-கச்சேரிகளைக் கொளுத்துவதையோ - தஸ்தாவேஜுகளைப் பொசுக்குவதையோ-அதிகாரிகள் முகத்தில் திராவகத்தை ஊற்றுவதையோ-அரசாங்க அலுவலகங்களை இடிப்பதையோ-போலீஸ் ஸ்டேசன்களை தாக்குவதையோ-மாற்றுக்கட்சியின் பந்தலில் நெருப்பை வைப்பதோ-மாற்றுக் கட்சியின் கூட்டங்களைக் கல்லெறிந்து கலைப்பதையோ - மாற்றுக்கட்சியினரைக் கல்லாலும், தடியாலும், கத்தியாலும் அரிவாளாலும், தாக்குவதையோ-மாற்றுக்கட்சியினரின் கொடிக்கம்பங்களை வெட்டி வீழ்த்துவதையோ-மாற்றுக்கட்சியினர்மீது வல்லடிப் பொய் வம்பு வழக்குகளைத் தொடுப்பதையோ-மாற்றுக்கட்சியினர்க்கு உரிமை மறுப்பதையோ போன்ற நாசவேலைகளைக் காணமுடியாது. இவ்வளவையும் தோழர் சுப்பிரமணியம் அவர்களது கட்சியைச் சேர்ந்தவர்கள்தாம் முழுக்க முழுக்க ஆங்காங்கு செய்து வந்திருக்கின்றனர். 1942ஆம் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது காங்கிரசுக்காரர்கள் நடத்திக்காட்டிய நாசவேலைகளையும்' ஆடிக்காட்டிய வெறிச்செயல்களையும் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் ஏனோ மறந்துவிட்டார் தெரியவில்லை!

உரிமையிழந்து தவிக்கும் ஒரு நாட்டை மீட்டிடும் விடுதலைப்பணி நல்லறிவு படைத்தோர் எவராலும் நாசவேலை என்று குறிப்பிடப்பட மாட்டாது. தமிழகம்-ஆந்திரம்-கேரளம்-கருநாடகம் ஆகிய நான்கும் தனித்தனி நாடுகளாவோ அல்லது தனித்தனி முழு உரிமை பெற்ற மாநிலங்களாகப் பிரிந்து குறைந்த அளவுத் திட்டத்திலே ஒரு கூட்டு அமைப்பிலே அமைந்து ஒரு கூட்டாட்சி நாடாகவோ விளங்குவதற்கு எல்லாத் தகுதியும் பெற்றனவேயாகும். இந்தியா ஒரு நாடல்ல; பல நாடுகளின் கூட்டுச் சேர்க்கையான ஒரு துணைக் கண்டமாகும். திராவிடத்தை ஒரு தனிக்கூட்டாட்சி நாடாக்குவது விடுதலை வேட்கையின் பாற்பட்ட செயலேயல்லாமல், நாசவேலையின்பாற்பட்ட செயலல்ல. திராவிடத்தை விடுதலை பெறச் செய்வது ஆக்கம் பயப்பதற்கே ஒழிய, நாசம் பயப்பதற்கல்ல. திராவிடத்தை வடநாட்டோடு இணைத்து, வடநாட்டு மத்திய ஆட்சியினர்கள் அடிமைப் படுத்தியிருப்பதுதான் உண்மையிலேயே நாசவேலையாகும். அதனை விடுத்து சுதந்திர சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி நாடாக ஆக்குவது நல்ல வேலையேயாகும்.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் கூட இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து ஒரு பகுதி பிரிந்து போவதை நாச வேலையாகக் கருதவில்லை; சனநாயகத்திற்கு ஏற்ற ஒரு செயலாகவே கருதுகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து ஏதேனும் ஒரு பகுதி தனியே பிரிந்து செல்ல விரும்பினால், அது இந்தியப் பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர்களின் இசைவு பெற்றுப் பிரிந்து செல்லலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. அப்படி ஒரு பகுதி இந்தியாவை விட்டுப் பிரிந்து தனியே செல்லுகிறது என்று வைத்துக் கொண்டால் அது எப்படி நாசவேலையாகும்?

தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தாமோ, தம் முடைய காங்கிரசு அரசாங்கமோ திராவிட நாட்டுப் பிரிவினையை ஒரு நாளும் சகிக்கப் போவதில்லை என்று கூறுவது, சிறுவர் வாயினும் சிரிப்பை விளைவிக்கத் தக்கதாக இருக்கிறது. சீசர், சார்லஸ், லூயி, நெப்போலியன், டில்லி நவாப்போல தம்மை ஒரு சர்வாதிகாரியாக நினைத்துக்கொண்டு, தம்முடைய சகிப்புத் தன்மையைப் பொறுத்து தான் நாட்டுப் பிரிவினை ஏற்படுவதும் ஏற்படாததும் அமையும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார். நாட்டுப் பிரிவினையைத் தாம் 'விரும்பவில்லை' 'எதிர்க்கப் போகிறேன்' என்று அவர் கூறியிருந்தாலும் அதில் பொருள் இருக்க முடியும். ஆனால் தாம் 'சகிக்க மாட்டேன்' என்று கூறியிருப்பது தான் வேடிக்கையாக இருக்கிறது. திராவிட நாட்டுப் பிரிவினை அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களின் சகிப்புத் தன்மையையா எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கிறது? அவர் சகிக்கமாட்டார் என்பதற்காக திராவிட நாட்டுப் பிரிவினை ஏற்படாமல் போய்விடுமா? திராவிட நாட்டு அறிவுப் படையும், ஆற்றல் படையும் திரண்டு எழுந்து தனித் திராவிடத்தை உருவாக்கும் முயற்சியில் வெற்றி பெற்றால், அப்பொழுது அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களின் சகிக்காத் தன்மை முன் வந்து அதைத் தடுத்து நிறுத்தி விடவாப் போகிறது?

பாக்கிஸ்தான் பிரிவினை ஏற்பட்டபோது, தோழர் சுப்பிரமணியம் அவர்களின் 'சகிக்காத் தன்மை'யும், காங்கிரசு அரசாங்கத்தின் 'சகிக்காத் தன்மை'யும் என்ன செய்து கொண்டிருந்தன? அவர்களுடைய 'சகிக்காத் தன்மை' அதே வேலையைத் தானே திராவிடம் விடுதலை பெறும் போதும் செய்து கொண்டிருக்கப் போகிறது? எனவே தோழர் சுப்பிரமணியம் அவர்களின் 'சகிக்காத் தன்மை' திராவிட விடுதலை எழுச்சியை இம்மியளவும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது என்ற உறுதியான நம்பிக்கையில் தான், திராவிட நாட்டு விடுதலை வேட்கையில் திளைத்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தார் அரும்பாடு பட்டு வருகிறார்கள் என்பதை அமைச்சர் உணருவாராக! தோழர் சுப்பிரமணியம் அவர்களைப் போன்று ஆணவம் பேசிய பல சர்வாதிகாரர்களின் எக்காளப் பேச்சு இறுதியில் தவிடுபொடியாகி மண்ணோடு மண்ணாய்க் கலந்த வரலாறுகளை, உலக வரலாற்று ஏடு நமக்கு நினைவுபடுத்திக்கொண்டு தானிருக்கிறது!

—இரா. நெ.

சிறுகதை

முரசொலி

முள்ளியூர்க் கோட்டையில் முரசு அதிர்ந்தது. கோட்டை வாயலின் பக்கத்திலிருந்த உயர்ந்த மாடத்திலிருந்து ஒலி பரவியது. முரசு அங்குதான் வைக்கப்பட்டிருந்தது. துணி சுற்றப்பட்ட இரண்டு கழிகளாலும் மூக்கன் முரசைத் தட்டிக் கொண்டிருந்தான். வயதாகி, கன்னங்குழிந்து, மெலிந்த கைகள்-வளைந்து முரசை அடித்துவிட்டு, எழும்போது வேடிக்கையாக இருந்தது. அந்தப் பாழடைந்த கோட்டையில், தூசி படிந்த முரசின் பக்கத்தில், அவன் நின்றது, அந்த மூன்று பொருள்களும் பழமையைச் சார்ந்தன என்பதைக் காட்டியது.

அந்தக் கோட்டையில் முரசு அடிக்கும் வேலை மூக்கனுடைய பரம்பரையைச் சேர்ந்ததாயிருந்தது, அது அவர்களுடைய குடும்பத்தின் மதிப்புயர்ந்த வேலை! அவனுடைய பாட்டன் முப்பாட்டன் அவனுக்குமுன்னிருந்தவர்கள், எல்லோரும் அந்தக்கோட்டையில் முரசறையும் வேலையிலிருந்தவர்கள், அவர்கள் அடிக்கும்பொழுது பெரும்போருக்கு வீரர்களை அழைப்பது போலிருக்கும், அவ்வளவு நிறுத்தி, பெருமையுடன், பூரிப்புடன் முரசை அடித்தார்கள். காலைப் பத்து நாழிகைக்கு நாள்தோறும் அடிப்பது வழக்கம். போர்வீரர்களை அழைக்க அல்ல, வயலில் வேலைசெய்யும் கூலியாட்களையும் பெண்களையும் வரச் சொல்ல! முரசு அடிக்கப்படுவது கேட்டதும் கோட்டையை அடுத்திருந்த குடிசைகளிலிருந்து மக்கள் சாரைசாரையாக கிளம்பினார்கள்.

ஆனால் வழக்கம்போல் மூக்கன் முரசை அடிக்கவில்லை. சிறிது நேரம் சீராக அடித்தபின், தட்டுவதில் தயக்கம் ஏற்பட்டது. பின் திடீரென்று நின்றுவிட்டது. வேலைக்குக் கிளம்பியவர்களுக்கு ஆச்சரியம், "மூக்கன் ஏன் இவ்வளவு சீக்கிரத்தில் நிறுத்திவிட்டான்? என்ன நேர்ந்தது" என்று.

நேர்ந்தது இதுதான், மூக்கன் நின்று கொண்டிருந்த இடத்தில் நின்று அவன் பார்ப்பதுபோல் கூரிய கண்களுடன். பார்த்தால் கோட்டையை நோக்கிவரும் காட்டுப் பாதையில் வேகமாக ஒன்று மரங்களிடை மறைந்து மறைந்து வருவது தெரிந்திருக்கும். சிறிதுநேரத்தில், இரண்டு அழகிய குதிரைகள் பூட்டிய வேலைப்பாடான வண்டி பளபளப்பது தெரிந்தது. மூக்கனுடைய கைகள் அப்பொழுது தளர்ந்தன. முரசு அடிப்பது நிறுத்தப் பட்டது. மூக்கன் மாடத்தைவிட்டு வேகமாக ஓடி, மாளிகைக்குள்ளிருக்கும் மணியக்காரரிடம் போய் நின்றான்.

கோட்டையையும் கோட்டையைச்சுற்றியிருந்த சிற்றூர்களையும் பரிபாலனம் செய்து வந்தவர் அந்த மணியக்காரர். அந்தக் கோட்டையில் அவர்தான் ஒரு மன்னரைப்போல அதிகாரம் செய்து வந்தார். மூக்கன் உள் நுழைந்த பொழுது மணியக்காரர் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டிருந்தார். பரபரப்புடன் மூக்கன் வருவதைப் பார்த்ததும், தட்டிலிருந்த கண்களை அவன் பக்கம் திருப்பினார்.

"ரா...ரா...ராஜா" மூக்கன் குழறினான்.

"என்ன?" மணியக்காரர் அதட்டிக் கேட்டார்.

"ராஜா வருகிறார்... காட்டுப் பாதையில்?"

மணியக்காரர் மாடத்திற்குப் போய் பார்த்தார். குதிரைகள் வருவது தெரிந்தது.

"ராஜா வருகிறார், ராஜா வருகிறார்!" அந்தக் கோட்டை முழுவதும் பரவியது. ராஜா என்றால் உண்மையில் அரசரல்ல ஒரு அரசபரம்பரையைச் சேர்ந்தவர் இப்பொழுது ஜமீன்தாராக இருப்பவர். இருந்தாலும் பழமையின் நினைவுச் சின்னமாக, அவர்கள் "ராஜா" என்று குடிமக்களால் அழைக்கப் பட்டனர். ராஜா அந்தக் கோட்டைக்கு வருவது எல்லோருக்கும் ஆச்சரியமாயிருந்து மற்றவர்களை விட மூக்கன் தான் அதிகப் பரபரப்புடனிருந்தான், அவனுடைய எழுபது தாண்டுக் காலத்தில், இதற்கு முன் இரண்டு தடவைகள் தாம் "ராஜா அந்தக் கோட்டைக்கு வந்திருக்கிறார். இது மூன்றாவது தடவை! மூன்றாவது தடவை!" என்று மூக்கன் சொன்னான்.

"ஏன் அப்பா அவர் இங்கேயே இருப்பதில்லை! எவ்வளவு பெரிய மாளிகை இங்கு பூட்டிக் கிடக்கிறது!" என்று மூக்கனுடைய மகள் வள்ளி கேட்டாள்.

"அவர்கள் இருக்கும் அரண்மனை இதைவிடப் பெரியதாம். நான் கூடப் பார்த்ததில்லை. அதைப்பற்றி பார்த்தவர்கள் புகழ்ந்து சொல்கிறார்கள். எப்பொழுதாவது வேட்டையாட வந்தால், இங்கு தங்குவார்கள்!"

மூக்கன் சொன்னதுபோல், முள்ளியூர்க் கோட்டைப் பக்கம் ஜமீன்தார் அதிகம் வருவதில்லை. இதற்கு முன் வந்தவர், இப்பொழுதிருக்கும் ஜமீன்தாருடைய தந்தை. இவர்-ஆண்டியப்ப வீரத்தேவர் இப்பொழுதுதான் முதல் தடவையாக இங்கு வருகிறார். கோட்டையிலிருப்பவர்களும் முதல் தடவையாக அவரை இப்பொழுது தான் பார்க்கப் போகிறார்கள்.

கோட்டையில் ஆரவாரம் அதிகரித்தது, ராஜாவுக்கு மரியாதை செய்ய எல்லோரும் தயாரானார்கள். மாளிகை திறக்கப்பட்டு, தூசிகள், கரையான்கள், சிலந்திக் கூடுகள் அகற்றப்பட்டு, கம்பளங்கள் விரிக்கப்பட்டன, மணியக்காரர் பெரிய தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு, தயாராக இருந்தார். மூக்கன் பழைய சரிகைச் சட்டையைப் போட்டுக் கொண்டு நின்றான். கோட்டையிலும் வெளியிலும் இருந்தவர்கள் தங்களிடமிருந்த உயர்ந்த ஆடைகளுடன் காட்சியளித்தார்கள். மாளிகையைச் சுற்றித் திரிந்து, துருப்பிடித்த பூட்டுகளைத் திறக்கச்சொல்லி, மணியக்காரர் நான்கு பக்கத்திலும் உத்தரவுகளைவீசிக்கொண்டிருந்தார்.

கூச்சல், குழப்பம், பரபரப்பு திடீரென்று நின்றது. குளம்படிச் சத்தம் கேட்டது. கூட்டத்தினர் அமைதியுடன் இருந்தார்கள். திடீரென்று மேட்டின்மேல் குதிரைவண்டி—அழகான கோச்சுவண்டி—வந்து நின்றது. முன்னிருந்த வேலைக்காரன் கீழேகுதித்து, கதவைத் திறந்துவிட்டான். ஜமீன்தாரரும் அவருடைய மனைவியும் இறங்கினார்கள். ஜமீன்தார் நாற்பத்தைந்திலிருந்து ஐம்பதுக்குள்ளாகக் காணப்பட்டார். அவருடைய மனைவி அஞ்சுகத்தம்மையார்—அவருக்கு மூன்றாவது மனைவி, ஊரார்கள் ஜமீன்தாரனி என்று குறிப்பிட்டார்கள், வீட்டில் அஞ்சுகம் என்று அழைக்கப்பட்டாள். அவளுக்கு வயது இருபத்து மூன்று இருபத்து நான்குக்கு மேலிருக்காது. ஆடையணிகளில் பெரிய இடத்துப் பெண் என்ற பெருமை இருந்தது. கையில் சிறு பெட்டியை அவள் வைத்துக்கொண்டிருந்தாள்.

ஜமீன்தார் கீழிறங்கும் பொழுது சோம்பலை முறித்துக் கொண்டு கொட்டாவிவிட்டார், எல்லோரும் கைகட்டி நின்று வணங்கினார்கள். கோயிலில் நிற்கிற பக்தனைப்போல, மூக்கன் ஜமீன்தாரைப் பார்த்தபடி நின்றான். அருகில் வந்த பொழுது, தரையில் தண்டனிட்டு, மண்ணை ஒற்றிக்கொண்டான். அவனுடைய விசுவாசம் ஜமீன்தாரருக்கு வேடிக்கையாக இருந்தது. எலும்புக் கூடான அவன், மண்ணில் அசைவது அவருக்குச் சிரிப்பைத் தந்தது. இதுவரை காட்டுவழியில் சோம்பலாக வந்த அவருக்கு, ஏதாவது ஒன்றைப்பார்த்துச் சிரிக்க வேண்டுமென்று தோன்றியது. மூக்கனைப்பார்த்து சிரித்தார். எதற்காக அவர் சிரிக்கிறார் என்று புரியாமல், கூடியிருந்தவர்கள் ஜமீன்தாரையும் கீழே கிடக்கும் மூக்கனையும் மாறி மாறிப் பார்த்தார்கள். பின் ஜமீன்தார் சிரிக்கிறார் என்பதற்காக, மணியக்காரர் சிரித்தார், மணியக்காரரைத் தொடர்ந்து கணக்கப்பிள்ளை, காரியக்காரர் சிரித்தார்கள். கூட்டம் பூராவும் சிரிக்க ஆரம்பித்தது. அஞ்சுகம்கூட இலேசாகப் புன்னகை செய்தாள்.

மூக்கன் எழுந்து நின்றான். எல்லோரும் சிரிப்பது தன்னைப்பார்த்துதான்என்று அவனுக்குத் தெரிந்ததும் உடல் குன்றிப்போனது. சுற்றிலும் முற்றிலும் பார்த்தான். ஏன் சிரிக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியவில்லை. ஓடிவிடலாம் போலிருந்தது.

ஜமீன்தாரரும்அவரதுமனைவியும் மாளிகைக்குள் சென்றார்கள். சோபாவில் ஜமீன்தார் அமர்ந்தார்.

அஞ்சுகம் தன்கையிலிருந்த பெட்டியைத் திறந்தாள். அதில் சிறு சிலை-பளிங்குக்கல்லில் செதுக்கப்பட்ட அழகிய உருவம் இருந்தது.

"இதை எங்கே வைக்கலாம்?"

"எதை?" கொட்டாவி விட்டுக்கொண்டே ஜமீன்தார் பார்த்தார். அவள் கையில் பளிங்குச்சிலை இருப்பது தெரிந்தது. "அதை ஏன் இங்கு எடுத்துவந்தாய்?"

"அதை விட்டுவர மனமில்லை, எவ்வளவு அழகாக இருக்கிறது."

"அழகாக இருக்கிறது, ஆனால் நீ போகுமிடத்துக்கெல்லாம் எடுத்துச் சென்றால், நாலைந்து அழகுகளாகப் போகுமேயன்றி முழு அழகுடன் இருக்காது!"

"பத்திரமாகக் கைப்பெட்டியில் வைத்துக்கொண்டு வந்தேன். உடைந்துபோகாது."

"இதுவரை உடையவில்லை."

ஜமீன்தார் சொல்வதைக் கவனிக்காமல், எங்கு வைக்கலாம் என்று அஞ்சுகம் சுற்றிலும் பார்த்தாள். ஒரு மாடம் இருந்தது. அதை நோக்கிச் சென்றாள். பல ஆண்டுகளா

(9-ம் பக்கம் பார்க்க)

செக்கோசுலேவிகியாவைச் சேர்ந்த 'சுவாடோபுளுக் செக்' என்பவர் (1846-1908) எழுதியதை ஒட்டி இச்சிறுகதை எழுதப்பட்டுள்ளது. அவர் செக் நாட்டு இலக்கியத்தில் பல கவிதைகள், கதைகள், கட்டுரைகள் முதலியவற்றால் பெயர் பெற்றவர்.

இலக்கியம்

கடலினும் பெரிது காதல்!

அன்பும் அறனும் கூடிய இல் வாழ்க்கையைப் பண்பும் பயனும் உடையதாக்கிக் கழி பேரின்பம் நுகர்ந்து வருகின்றனர். புதுமணக் காதலர்களான தலைவனும் தலைவியும்.

தலைவன் தலைவியிடம் மாறாக் காதலும், தணியாப் பற்றும் செலுத்தி, அவருடைய பண்பு நலன்களையும், தோற்றப் பொலிவுகளையும் அவ்வப்போது புகழ்ந்தும், பாராட்டியும், போற்றியும் கூறி இல்லறவாழ்வில் இன்பமணம் கமழும்படி செய்து வருகிறான்.

சில காலம் கழித்து மனையாட்சியின் நன்கலமாகக் கருதப்படும் அழகிய ஆண் மகவு ஒன்றைத் தலைவி ஈன்றெடுக்கிறாள். காதலரிருவரும் செல்வக் குழந்தையைப் பேணி வளர்த்து வருவதிலே பேரூக்கம் காட்டிப் பேரின்பம் எய்தி வருகின்றனர்.

தலைவி தன் அருமை மகனைச் சீராட்டிப் பாராட்டி, தலைமயிரை வாரி முடித்து அழகு மலர் சூட்டி, அவனுக்கு வண்ண உடைகள் உடுத்தி, அவனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகிறாள். செல்வக் குழந்தையின் மழலை மொழி கேட்டு இன்புறுவதிலும், அவனது தத்து நடை கண்டு மகிழ்வதிலும், வேடிக்கை விளையாட்டு காட்டிக் களிப்படைவதிலும் பெரும் பொழுதினைக் கழித்து வருகின்றனர் அவ்விளங் காதலர்கள்.

கவலையற்ற வாழ்வில் காலங் கழித்து வருவதால், தலைவனுக்குச் செலவினம் பெருகி, வருவாய் இனம் குறைந்து வருகிறது. கைப்பொருள் முழுவதும் குறைந்து பிறகு வறுமையில் வாடாமலிருக்கும் பொருட்டு போதுமான பொருள் முன் கூட்டியே தேடிக்கொள்வது நல்லது என்ற முடிவுக்குத் தலைவன் வருகிறான். வெளியூருக்குப் புறப்பட்டு சென்றாலொழிய பொருள் தேட முடியாது என்ற நிலையில் வெளியூருக்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச்செய்கிறான். தான் பிரியப் போகும் கருத்தை எப்படித் தலைவியிடம் வெளியிடுவது என்று தெரியாமல் தவித்துச் சில நாட்களை அப்படியே தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறான்.

ஒருநாள் தலைவி மகிழ்ச்சியோடு இருக்கும் நேரமாகப் பார்த்து, அவளிடம் தலைவன் குடும்பத்தில் ஏற்படும் செலவுகளைப் பற்றியும், மகிழ்ச்சியோடு காலந்தள்ள அச்செலவுகள் எப்படி இன்றியமையாதனவாகத் தேவைப்படுகின்றன என்பதைப் பற்றியும், பொருள் தேடித் தீர வேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பது பற்றியும், பொருள் தேடவேண்டுமானால் வெளியூருக்குச் சென்று ஆக வேண்டியிருக்கும் நிலைமை பற்றியும், அதன்படி தான் வெளியூர் செல்ல முடிவு செய்திருப்பது பற்றியும் சொல்லிக்கொண்டு வருகையில், தலைவி திடீரென்று கோவெனக் கதறித், தன்னிரு கண்களையும் இருகைகளாலும் பொத்திக் கொண்டு அவ்விடம் விட்டு எழுந்து ஓடிவிடுகிறாள்.

அன்போடு பேசிக்கொண்டிருந்த அவள் அழுத கண்களோடு அகன்றுவிட்ட நிலையை

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

எண்ணி தலைவன் மிகவும் மன வருத்த முறுகிறான். தலைவன் அவள் பின்னால் சென்று அவளது இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, கண்ணீரைத் தன் மேலாடையால் துடைத்து விட்டுத், தலைமயிரை மெல்லத் தடவிக் கொடுத்துக்கொண்டு, அவளுடைய எதிர்கால நன்மைக்குத் தானே, தான் வெளியூர் புறப்பட இருப்பதாக உணர்த்துகிறான். தலைவி அவனுடைய பிடியை உதறித் தள்ளிவிட்டுக் கொல்லைப்புறச் சோலைக்கு ஓடிவிடுகிறாள்.

தலைவனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. தலைவி அழுவதையும் வருந்துவதையும் அவனால் எப்படிகண்டு கொண்டிருக்க முடியும். ஏன் இப்பொழுது வெளியூர் செல்லும் கருத்தை வெளியிட்டோம் என்று எண்ணி தலைவன் வருந்துகிறான். தலைவன் அழுது கொண்டு தன்னந்தனியே நிற்கும் தலைவியின் அருகில்சென்று அவளைத் தேற்றுவிக்க முயலுகிறான். தலைவி அழுவதால் மையுண்ட கண்களிலிருந்து கண்ணீர் சிந்தி, அவளுடைய அழகிய மேனியையும், ஆடையையும் நனைக்கின்றது.

தலைவன் தலைவியது கண்ணீரை மெல்ல துடைத்துக் கொண்டே, அவளுக்கு மகிழ்ச்சியூட்ட எண்ணி, "மடந்தையே! நின் வடிவும் எப்படியிருக்கிறது தெரியுமா? பொன்னைப்போல் நிறம் பெற்று ஒளி வீசிக் கொண்டிருக்கிறது! உனது கருமையான கூந்தலோ, நீலமணியைப்போல அழகுபெற்று நறுமணங் கமழ்ந்து கொண்டிருக்கிறது! அழகிய மை தடவப்பட்ட உனது கண்களோ குவளை மலரைப்போல் காணப் படுகின்றன! உனது தோள்களோ மூங்கில் போத்து போன்று மிக்க அழகாகக்காட்சியளிக்கின்றன! இவற்றையெல்லாம் பார்க்கப் பார்க்க எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி உள்ளத்தில் பொங்கி எழுகின்றது தெரியுமா?" என்று கூறுகிறான்.

தலைவி வெடுக்கென்று திரும்பி "போதும் நிறுத்துங்கள்! நீங்கள் ஒன்றும் என்னைப் புகழவேண்டாம் இப்படியெல்லாம் கூறி என் வேதனையை மறக்கச்செய்யலாம் என்று பார்க்கிறீர்கள்! பொய் மொழி கூறி என்னைப் புகழ்வதால் நான் ஏமாந்துவிட மாட்டேன்! என்னைக் கண்டால்தான் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பது நீங்கள் என்னை விட்டுப் போவதிலிருந்தே தெரிகிறதே! நீங்கள் என்னோடு எத்தகைய பேச்சும் கொடுக்கவேண்டாம்! உங்கள் விருப்பப்படி போய் வாருங்கள்!" என்று வருத்தத்தோடு கூறுகிறாள்.

அதற்குத் தலைவன் "கண்ணே! நான் அறவழியில் நிலைபெற்று நின்று பயனடைவோர் பெறும் பயனை விரும்பி தான் சில பல பணிகளை மேற்கொள்கிறேனே யல்லாமல் வேறொன்றிற்காகவும் அல்ல!" என்கிறான்.

"என்னைத் தன்னந் தனியாக விட்டுச் செல்வதிலே உங்களுக்கு விருப்பந்தான் என்றால், அதை நான் என்ன சொல்லித் தான் தடுத்துவிடப் போகிறேன்!" என்கிறாள் தலைவி.

"பொன் வளையல்கள் அணிந்து கொண்டு விளையாடி மகிழ்ச்சியூட்டும் நம் அருமை மகன் உன் அருகில் இருக்கும் போது, உனக்கு என்ன கவலை ஏற்படப்போகிறது! அவன் தான் நன்றாக ஓடியாடி விளையாடக் கற்றுக் கொண்டிருக்கிறானே!" என்கிறான் தலைவன்.

"மகன் எனக்குத் துணையாக இருப்பதால், நீங்கள் பிரிந்து போகத் துணிந்துவிட்டீர்களா? அப்படியானால் உங்களுக்கு என் மீது ஆசையில்லை என்று சொல்லுங்கள்!" என்கிறாள் தலைவி.

"அன்பே! நான் உன் மீது எவ்வளவு ஆசைகொண்டிருக்கிறேன் தெரியுமா? ஆசையின் அளவைக் கணக்கிட்டால் அது கடலினும் பெரிதாக இருக்குமே! நீ நல்ல வளமிக்க வாழ்வில் வாழவேண்டும், ஒரு குறையும் ஏற்படக் கூடாது என்பதற்காகத் தானே, நான் பொருள் தேட வெளியூர் புறப்படவேண்டியிருக்கிறது என்று கூறினேன். நீ இந்த உண்மையை அறிந்து கொண்டால், இப்படியெல்லாம் வருந்தி அழ மாட்டாய்!" என்று சொல்லிக் கொண்டு அவளை அருகே அணைத்து அவளது கண்ணீரைத் துடைக்க முயலுகிறான்.

தலைவி அவனை உதறித் தள்ளிவிட்டு விட்டுக் கண்களைப் பொத்திக்கொண்டு தேம்பித் தேம்பி அழுகிறாள். தலைவி ஆற்றாது அழுவதைக் கண்ட தலைவன் மிகவும் வருந்துகிறான். இந்தக்கோலத்தில் தலைவியைக்காணவைத்து விட்டோமே என்று எண்ணி எண்ணி ஏங்குகிறான். தலைவியின் வருத்தத்தையும் வாட்டத்தையும் அகற்றவேண்டி பிரிந்துசெல்வதை நிறுத்தி விடுவது என்ற முடிவுக்கு வருகிறான் தலைவன்.

"கண்ணே! உன்னையும் அருமை மகனையும் பார்த்துக் கொண்டிருப்பதிலே பெறுகிற மகிழ்ச்சியைக் காட்டிலும் வேறு சிறந்த மகிழ்ச்சியின்பத்தை நான் வேறு எங்கே போய்ப் பெறப்போகிறேன். எனவே நான் வெளியூர் புறப்படும் திட்டத்தைக் கைநழுவ விட்டுவிட்டேன். இனி நீ வருந்தாதே!" என்கிறான் தலைவன்.

தலைவி கண்களிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நீர்த்திவலைகள் முத்துக்கள்போல் ஒன்றன்பின் ஒன்றாய் அழகிய கன்னத்தில் உருண்டோடி வந்துகொண்டிருக்க, புன்சிரிப்பு தவழும் முகத்துடன் திரும்பிப்பார்த்து "அப்படியா? வெளியூர் புறப்படுவதை நிறுத்திவிட்டீர்களா? உண்மையாகவா? இனி ஒருகாலும் போகமாட்டீர்களே?" என்று தலைவனின் இருதோள்களையும் பிடித்துக் கொண்டு, வியப்புணர்ச்சியோடும் மகிழ்வுணர்ச்சியோடும் அவனது முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு கேட்கிறாள்.

"இனி நாம் ஒருவரையொருவர் ஒருகாலும் பிரிய மாட்டோம்! இனி உறுதி! எனவே நீ கொண்டுள்ள வேறுபாடு களையெல்லாம் இன்றே விட்டுவிடு! முகம் வேறுபட்டுக் காட்டிமட்டும் என்னை வருத்தாதே!" என்று நயந்து கேட்டுக் கொள்கிறான் தலைவன்.

தலைவி அதற்கு விடை ஏதும் வாயால் கூறாமல், இசையையும் அன்பின் அளவையும், கண்ணாலும் சிரிப்பாலும் காட்டி அப்படியே தலைவனை கட்டி அணைத்துக்கொள்கிறாள்!

* * *

இது நற்றிணை 166ஆம் செய்யுளின் கருத்தைக்கொண்டு வரையப்பட்ட காதல் சொல்லோவியக் காட்சியாகும். இந்தச் செய்யுள் பிரிவுக் குறிப்பினால் வேறுபட்ட தலைவிக்குத் தலைவன் சொல்லியது என்னும் பிரிவைச் சார்ந்த பாலைத்திணையைச் சேர்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று கண்டுகொள்ள முடியவில்லை.

பொன்னும் மணியும்
போலும் யாழநின்
நன்னர் மேனியும்
நாறிருங் கதுப்பும்
போதும் பணையும்
போலும் யாழநின்
மாதர் உண்கணும்
வனப்பின் தோளும்
இவைகாண் தோறும்
அகமலிந்து யானும்
அறநிலை பெற்றோர்
அனையேன் அதன்தலைப்
பொலந்தொடிப் புதல்வனும்
பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத்து
இலனே நினையின்
யாதனிற் பிரிவாம் மடந்தை
காதல் தானும்
கடலினும் பெரிதே

[நற்றிணை-166]

[பொழிப்புரை; மடந்தாய்! பொன்னைப் போலும் ஒளி வீசுகின்ற உனது நல்ல வடிவமும், நீல மணியைப் போலும் மணங்கமழும் உன் கரிய கூந்தலும், குவளைமலரைப் போன்ற அழகிய மையுண்ட உன் கண்களும், மூங்கில் போத்தினைப் போன்ற அழகையுடைய உன் தோள்களும் ஆகிய இவற்றைக் காணும் தோறும், நானும் உள்ள மகிழ்ந்து, அறத்தின் கண்ணே நிலைபெற்றோர் அடையும் பயனை அடைந்தேனாகின்றேன்; அதன் மேலும் பொன்னாலாகிய வளை யணிந்த மகனும் விளையாடக் கற்றிருக்கிறான். உங்களைக் கண்டு மகிழ்வதைக் காட்டிலும் சிறந்த தொன்றும் இல்லாமையால், வேற்றிடம் சென்று செய்யும் செயல் ஒன்றும் இல்லாதவனாகி யிருக்கின்றேன்; உன்பால் எனக்குண்டாகிய காதலன்போ கடலைக் காட்டிலும் பெரிதாகும்; இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தரால், எக்காரணத்தை முன்னிட்டு நாம் ஒருவரையொருவர் பிரியப்போகிறோம்? பிரியப்போவதில்லையாதலால், நீ வேறுபட்டுக்காட்டி என்னை வருத்தாதே!

நன்னர்-நல்ல; நாறு-மணங்கமழும்; இரும்-கரிய; கதுப்பு-கூந்தல்; பணை-மூங்கில் போத்து.]

* * *

காதலன் பிரிவைக்கண்டு காதலி எவ்வளவு வருந்துகிறாள் என்பதும், அவளைத் தேற்ற காதலன் எப்படியெல்லாம் முயலுகிறான் என்பதும், பொருள் தேடுவதைக் காட்டிலும் காதலியின் வருத்தத்தை மாற்றுவதே மேல் என்ற முடிவுக்குத் தலைவன் வருகிறான் என்பதும் இந்தச் செய்யுளில் அழகாக விதந்தோதப்பட்டிருக்கின்றன.

பரந்து காணப்படும் பொருள்களிலே பெரிதாகக் காணப்படுவது கடலேயாதலால், அளவிற் பெரிதிற்கு எடுத்துக்காட்டாகக் கொண்டார் புலவர். காதலின் அளவை குறிப்பிட வந்த புலவர், காதல் மேற்குறிப்பிட்ட அளவிற் பெரிய கடலினும் பெரிது என்று கூறிக், காதலின் சிறப்பை நயம்பட எடுத்துக் கூறியுள்ளார்.

உடலின் நிறத்திற்குப் பொன்னின் நிறத்தையும், கரிய கூந்தலுக்கு நீலமணியையும், மையுண்ட கண்களுக்குக் குவளை மலரையும், தோள்களுக்கு மூங்கில் போத்தையும் உவமைகளாகக் கூறுயிருப்பது போற்றி மகிழ்வதற்குரியதாகும். ○

குருசேவின் பகையாலே வீழ்ந்த பெருந்தலைவன்.

1953-ம் ஆண்டு......

'உருக்கு மனிதன்' என்ற சிறப்புப் பெயரால் உலகுக்குத் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்ட இரசியா நாட்டுத் தலைவன் சோசப் ச்டாலின் காலம் கிளப்பிய மரணப் புயலால் மறைக்கப் பட்டான். பொதுவுடைமைத் தலைவனின் பிரிவு ஈரமுள்ள இதயங்களையெல்லாம் நெகிழவைத்தன. ச்டாலினுக்குப் பின்னல் யார்?; இரசியா மட்டு மல்ல அகில உலகமுமே ஆவலோடு கேட்டது. இன்று 'நேருவுக்கு பிறகு யார்?' என்ற கேள்வி இங்கே கிளம்பியுள்ளதேஇதைப்போல விடை யற்ற வினவாக நிற்க வில்லை அக்கேள்வி. தன்னை வளர்த்துக் கொண்ட ச்டாலின் தன் பின்னல் நாட்டைக்காக்க ஒரு தானையையும் பயிற்றுவிக்கத் தவறவில்லை. அத்தானையின் தலைவன் தான், இன்று துரோகி என்று குற்றம் சாட்டி தூரவீசி எறியப்பட்டுள்ள மாலங்கோவ்!

பொறியியற் புலமை பெற்று இயந்திரங்களோடு இயந்திரமாக வாழ்ந்துவந்த மாலங்கோவை அரசியல்உலகுக்கழைத்து வந்த பெருமை ஒரு பெண்ணுக்குரியது. முட்ட வரும் காளையையும் மோதிக் கொல்லும் பருவத்தான். கண்டோரை மயக்கும் எழில் வண்ண உருவத்தான், ஆம்! அப்போழுது அவனுக்கு வயது இருபது. பாகுவிலிருக்கும் தொழிற்சாலை ஒன்றில் பணியேற்கும் பொருட்டு பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தான் அவன். ஓய்வு நேரங்களின் போது அவனுடைய பொழுதுபோக்குக்கு பொதுக் கூட்டங்கள் இலக்காயின. ஒரு நாள் மாலை அவனுக்கு ஓய்வு வேளை, பொதுவுடைமைக் கட்சியின் கூட்டம் ஒன்று இப்பொறியியலாளனின் கருத்தைக் கவர்ந்தது. 'செவிக்குணவு' தேடிச் சென்றான், புவிக்கெல்லாம் அழகரசி என்று புகழ் பாடும் ஒரு பூங்கொடியைக் கண்டான். 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்.' கருத்துடன் கருத்து பின்னிப்பிணைந்தது. முடிவு காதல் பிறந்தது. அவன் தணிக்கச் சென்றது கருத்துப் பசி-அவனைத் தழுவி நின்றது காதல் பசி.

'கொத்தி வருத்திடும் காதற் பசி' அவர்களைக் கூட்டி வைத்தது. காதற் கீதம் பாடிய அவர்கள் கணவன் மனைவி ஆயினர். இதயத்தால் ஒன்று பட்ட அவர்கள் இருவேறு பட்ட சூழ்நிலைகளில் வாழ்ந்து வந்தனர். இருபதுவயதுகளே நிரம்பிய இளங்காளை அவன், இருபத்தெட்டு வயது பருவக் கன்னி அவள். மாணவப் பருவத்தைத் தாண்டி வாழும் வகை குறித்து ஆர்வம் கொண்டிருந்தான் அவன், அரசியலுக்கு பலியாகி தன் வாழ்வை பொதுவுடைமைக் கட்சியோடு பிணைத்து விட்டிருந்தாள் அவள். கட்சியின் தலை சிறந்த தலைவர்களுள் ஒருவராகக் கருதப் பட்ட மாலட்டோவின் பகுதி நேர அந்தரங்கச் செயலாளராகப்பணியாற்றினாள், அவள் பெயர் லாரா.

மாலங்கோவ் ஒரு மாளிகை வாசி. அதனால் தானோ என்னவோ, கட்சியின் மேல் பற்று இருந்த அளவிற்குப் பாசம் வளரவில்லை. அவன் ஆர்வத்தைத் தூண்டி விட்டு அது கொழுந்து விட்டெரிய இதய விளக்கில் எண்ணெயாக நின்றாள் லாரா. இயக்கத்தில் அவள் பெற்றிருந்த செல்வாக்கு கட்சியின் விளம்பரத் துறையில் அவனுக்கு ஒரு வேலை தேடித் தந்தது 'கண்ணின் கடைப்பார்வை காதலி காட்டி விட்டாள்'. மண்ணில் இக்குமரனுக்கு கட்சிப் பணி என்ற மலையும் சிறு கடுகாக தோன்றியது. பணியா அவன் கட்சி வளர்ந்தது, அ பணியைத் தழுவி நின்ற பு ழால் அவன் வளர்ந்தா கொள்கை மேல் கொண்டுள் பற்று, கொண்டவன் மே வைத்துள்ள அன்பு - கட் மேல் கொண்டுள்ள ஆர்வ எதிர்காலம் மேல் கொண் டுள்ள விருப்பம், அறிவை ஒளிரவைத்த தெளிவு, செ லைத் தழுவி நின்ற முயற் அவனை உயர்த்தோனாக்கின.

மாலங்கோவ் ஒரு புத்தக புழு. உயர்ந்த ஏடுகளெல்லா அவனுக்கு உற்ற நண்பா ளாக விளங்கின. ஒரு நா அறையில் அறிவு செறிந் ஏடு ஒன்றினுள் தன் விழிகளை மேயவிட்டுக்கொண்டிருந்தான் சிறிது நேரத்தில் அடைத்து கிடந்த கதவு திறந்த அங்கே அவன் அன்பு மனைவ யின் உருவம்தெரிந்தது, ஆம் லாரா வந்து கொண்டிருந்தா அவள் இதழிலே ஒளிர்ந் கொண்டிருந்த புன்னகை இ யத்திலே பொங்கி வழிந் மகிழ்ச்சியை எடுத்துக் காட் டின. அவள் நடையிலே இருந்த வேகம் செயலிலே கொண்டுள்ள ஆர்வத்தை விளம்பரப் படுத்தின வேண்டா வெறுப்பாக புத் கத்தினுள் புதைந்திருந்த தல கண்களை அப்பொற்சிலையின் மேல் பாய விட்டான்-விழிகளை உயர்த்தி நெற்றியைச் சுளித்து அவன் பார்த்த அத்தோ றம் 'என்ன வேண்டும்?' என் வினவை எழுப்பியது.

அவன் உள்ளத்தை உணர்ந்து கொண்ட அவ பேசினாள்- "நான் ச்டாலினின் துணைச்செயலரைக் காண வேண்டும்."

'சரி, போ, பார்த்து விட் வா,' விடை கொடுத்து அனு பினான் விருது பெறப் போவது தெரியாத அவ்வீரன்.

"சென்றேன், செயலரை கண்டேன். ஏடுகளை புரட்டி கொண்டிருக்கும் அவர் இந் ஏந்திழையை ஏறிட்டுப் பார்க் மறுக்கிறார்;" சிரிப்பை அட க்கிக்கொண்டு பேசினாள் அச்சி காரி.

"லாரா! என்ன பேசுகிறா நீ? புரியும்படி......" புரிந் கொள்ளாத அவன் இதய வினா உருப்பெற்று வெளி வ தது.

"சொல்கிறேன், முதலி அந்த புத்தகத்தை மூடி கீே வையுங்கள், "அமைதியா வேண்டுகோள் விடுத்தாள்.

ஆர்வம் அலைமோத அ ளைப் பார்த்தான். புன்சிரிப் தவழ அப்பொன்வாத்து பே யது. தலைவர் ஸ்டாலினி

ந்தரங்கச் செயலாளரை சந்
த்து தங்களை அவர் துணை
ாளராக ஏற்றுக்கொள்ள
வண்டினேன். மறுக்கவில்லை
வர். மார்சல் ச்டாலினுடன்
பட்டி ஒன்றுக்கு ஏற்பாடு
சய்துள்ளார். வெற்றி பெற்
ல் விருது உண்டு.''

''அப்படியா லாரா, உண்மை
ாகவா லாரா'' ஆச்சரியத்
தாடு கேட்டான் அவன்.

''ஆமாம், இதற்கு வழி
மைத்த என்க்குப் பரிசு...
வள் கேட்டாள்.''

''ம்...'' அவன் பேசவில்லை,
லையசைத்தான். 'இச்' என்ற
லி மட்டும் அறைச்சுவர்
ளிலேமோதிஎதிரொலித்தது.
டைபெற்றுச் சென்ருள்
ாரா, வரப்போகும் விருதை
ண்ணி மகிழ்ந்தான் வீரன்.

பேட்டிக்குத் தன்னை தயா
ாக்கிக்கொள்ள துடித்தான்.
ாளொன்றுக்குப் பதினாறு
ணிக்கூர் வீதம் எட்டு வாரங்
ளை ஏடுகளின் மத்தியில் செல
விட்டான். தன் அறையினுள்
லேயே முடங்கிக் கிடந்தபடி
பெரிய பெரிய புத்தகங்களைப்
ரட்டினுன். பத்திரிகைகளைப்
டித்தான். ஏடுகளை வாசித்
தான், புள்ளிவிவரங்களைச்
சகரித்தான். உலகவளர்ச்சி,
இரசியாவின் வரலாறு, மார்க்
ின் தத்துவம், ஏஞ்சல்சின்
ருத்துரைகள், கட்சியின்
கொள்கை, தொழிலாளர் சிறப்
புகள், சாரின் கொடுமை,
லெனின் கட்டுரை, ச்டாலின்
பச்சு இவைகளையெல்
லாம் ஒன்றுவிடாமல் படித்
தான். ச்டாலின் என்ன கேட்
ார், என்ன பதில் சொல்வது
ன்பதையெல்லாம் தானே
ற்பனை செய்துகொண்டான்.
வெற்றிபெறவேண்டும் என்ற
ஆசை, முடிவு என்ன ஆகுமோ
ன்ற அச்சம் இவைகளுக்
டையே அவன் உள்ளம் ஊச
ாடியது.

பேட்டிக்குரிய நாள் வந்தது.
ார்வையாளர் அறையிலிருந்த
ாலங்கோவ் அழைப்பை ஏற்
றுக்கொண்டு ச்டாலின் அலு
வலக அறைக்குள் நுழைந்தான். குன்றனைத்த பெருந்தோளன் ச்டாலின் குறையாத மலைபோல அங்கே வீற்றிருந்தான். உள்ளே சென்ற மாலங்கோவ் அடக்க ஒடுக்கமாக. ஆனல் ஆண்மை குன்ருமல் அவர் முன்நின்ருன். உப்பிப்போன அவன் கன்னம் வெளிறிப் போயிருந்தது. உடம்பிலே இலேசாக உதறல் எடுத்தது. எனினும் உள்ளத்தில் ஆட்சி செலுத்திய உறுதி அதைத் தடுத்து நிறுத்தியது. மாவீரன் ச்டாலின் விழிகள் மாலங்கோவின் உள்ளத்தைத் துருவிப் பார்த்தன. மாலங்கோ ச்டாலின் விழிகளில் தன் வருங்காலத்தைப் படித்துக் கொண்டிருந்தான். ச்டாலின் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். பதில் என்ற கேடயத்தால் நிறுத்த முயன்ருன். மாலங்கோவ்.

முதற் கேள்வி, '1924ல் உக்ரேன் பகுதியில் விளைந்த கோதுமையின் அளவு என்ன?' திணறவில்லை, திடமாக பதிலளித்தான், கேள்வி தொடர்ந்தது.

பொதுவுடமைக்கட்சியின் பத்தாவது மாநாட்டில் நிறைவேறிய ஐந்தாவது தீர்மானத்தின் சிறப்பு என்ன?

''லெனின் பல்கலைக் கழகத்தில் எத்தனைபேர் இதுகாரும் பொறியியற் புலமை பெற்றுள்ளனர்.?''

''மாசுகோ நகரில் பொதுவுடமைக்கட்சி அங்கத்தினர்கள் எத்தனைபேர்?''

இன்னும் எத்தனையோ பல கேள்விகள், என்னென்னவோ துறைகளில், கேள்விகளை முன்னமே அறிந்து கொண்டவன்போல உடனுக்குடன் பதிலளித்தான். இலெனின் கட்டுரைகளிலிருந்துமேற்கோள்காட்டினுன். ச்டாலின் உரைகளைக்கொண்டே அவர் கேள்விகளை முறியடித்தான். ச்டாலின் பதில் கேட்டு மகிழ்ந்தார், திறமைகண்டு வியந்தார், அறிஞன் என்று புகழ்ந்தார். உடனிருந்த மாலடோவ், பாசுக்ரேபைசெவ் இருவரையும் பார்த்து 'இவர் ஒரு நல்லறிஞர்' என்று பூரிப்போடு சொன்னர். அச்சொற்கள் 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி' பொழிந்தது போலிருந்தது மாலங்கோவுக்கு பேட்டி முடிந்தது. மாலங்கோவின் கீர்த்தி வளர்ந்தது.

கொண்டவளின் துணையாலே உயர்ந்த கதை கேளீர்!

தலைவர் ச்டாலினின் அந்தரங்கச் செயலாளர் பாசுக்ரேபைசெவ் அடுத்த வாரத்திலிருந்து மாலங்கோவை தன் துணையாளராக்கிக்கொண்டார். அன்று முதல் இயக்கத்தோடு தன் வாழ்வை இணைத்துக்கொண்டு கட்சியின் வளர்ச்சிக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் தொண்டாற்றலானுன். கட்சிப் பணியே மக்கள் பணி, 'மக்கள் பணியே மகேசுவரன் பணி' என்பதை உணர்ந்தான். ச்டாலின் சாக்காட்டில் வீழ்ந்த போது மாலங்கோவோடு தோளோடு தோள் நின்று அரசாண்ட பெரியா, மாலடோவ் இவர்களும் அவன் முயற்சிக்குத் துணைநின்றனர். பெரியாவின் மனைவி தாமரா, மாலடோவின் துணைவி பாலினு இருவரும் மாலங்கோவின் மனைவி லாராவின் உயிர் நண்பர்கள். இவர்கள் மூவரையும் கட்டிப் பிடித்திருந்த அன்புக்கயிறு மாலங்கோவின் வளர்ச்சிக்கு மேலும் வகைசெய்து தந்தது.

தன்னலங் கருதாத் தன்மையும், தெளிந்த அறிவாற்றலும், திடமான நேர்மைப் பண்பும், அஞ்சாதஆண்மையும், அவனை உயர்ந்தோனுக்கி உலகுக்கு உணர்த்தின. சுல்வாகின் என்பான் மாலங்கோவின் உயிர் நண்பன் உற்ற துணைவன். உள்நாட்டுக் கலகத்தின்போது மரணவாயிலிருந்து ஒரு முறை மாலங்கோவை காத்தவீரன் சுல்வாகின். கொடுத்த வேலையைக் குறித்த நேரத்தில் செய்யாது போன சுல்வாகின் தலைமை அதிகாரிகளின் ஐயத்திற்காட்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். தலை தப்புவது அருமை' என்பதை உணர்ந்த சுல்வாகின் அரசாங்கத்தில் சீரும் சிறப்புமாக இருந்த தன் நண்பன் மாலங்கோவிடம் ஓடிவந்து நடந்ததைக்கூறி காப்பாற்ற வேண்டினுன். நேர்மை தவருத மாலங்கோவ் நண்பனென்றும் பாராது, பாசம், பச்சாத்தாபம் எதுவும் காட்டாது விசாரணைக்கு ஆணையிட்டான்.

இதுபோலவே பண்பாளன் மாலங்கோவ் தான் காதலின் அடிமையல்ல கடமையின் அடிமை என்பதை செயல் மூலம் செய்துகாட்டினுன். ஒரு நாள் தன்னை மறந்து அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருந்தான் மாலங்கோவ். அவன் மனைவி லாரா கூடத்தில் உட்கார்ந்து அரசியல் வரலாற்று ஏடு ஒன்றை புரட்டிக்கொண்டிருந்தாள். அதில் தன் கணவனின் பெயரைக் காணவே பெருமிதம் கொண்டாள். ஆசைக்கு அணை போட முடியாத அவ்வாரணங்கு, ஓடோடி வந்து மாலங்கோவிடம் காட்டினுள். வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த மாலங்கோவ் அந்த ஏட்டை வாங்கி அப்படியே கீழே போட்டுவிட்டு தன் பணியைத் தொடர்ந்தான். ஆவலோடு ஓடிவந்த அவள் நெஞ்சில் நெருப்பை அள்ளி கொட்டியது போலிருந்தது இந்நிகழ்ச்சி. மருத்துப்போன இதயம் படைத்த மாலங்கோவை வெறுத்துவிட்டு அவ்வறையை விட்டு வெளியேறினுள் லாரா. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உயர்ந்த இலட்சியங்களின் அடிப்படையிலே தன் வாழ்வு அமைக்கப்பட்டது என்பதை இதுபோல பல நிகழ்ச்சிகளின் மூலம் எடுத்துக் காட்டினுன் அவன்.

தன்னை ஒரு உழைக்கும் இயந்திரமாகவே மாற்றிக் கொண்டான். நாளொன்றுக்கு ஐந்துமணி நேரத்திற்கும் குறைவாகவே ஓய்வு பெற்ருன். மாலை இரண்டு மணி முதல் ஏழரை மணிவரை அலுவலக வேலையும், அதன்பிறகு காலைவரை தலைவர் ஸ்டாலினுடன் தனி வேலையும் செய்து நேரம் முழுவதையும் நாட்டு நலனிலேயே செலவிட்டான். 1932ல் நடந்த ச்டாலின் வரவேற்புக் கூட்டம் ஒன்றின் மேடையில் தனக்கு தலைவர்கள் பட்டியலில் ஒன்பதாவது இடம் தரப்பட்டிருப்பது காண மகிழ்ந்தான், மக்கள் வியந்தனர், மனைவி எண்ணம் ஈடேறியது என்று பூரித்தாள்.

1953, ச்டாலின் மறைவுக்குப் பின்னுல் அவர் வகித்துவந்த பதவிக்கு இவனை உயர்த்துவித்தது இரசியா. அவனோடு அப்போது துணைநின்ற இருவருள் ஒருவரான பெரியா குருசேவின் ஆட்சியில் சாகடிக்கப்பட்டார். இரசிய அரசியலில் புயல் வீசியது. புகழேணியின் உச்சியிலே வைத்து தொழப்பட்ட பொதுவுடைமையின் வைரி என்று தூற்றப்பட்டார், சிலைகள் தகர்ந்தன, அவர் எழுதிய ஏடுகள் எரிந்தன. அவருக்கு துணைநின்றவர்களெல்லாம் துரோகிகள் என்று பட்டம் கட்டப்பட்டனர். அதன் விளைவு இரசிய அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புக்களை ஏற்று நடத்திவந்த மாலங்கோவ், மாலட்டோவ், காகனேவிச், செப்பிலோல் ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டன. மாசுகோ என்ற மர்மக் குகையில் எத்தனையோ விசித்திரங்கள் நடக்கின்றன. அவைகளுள் இதுவும் ஒன்று. கொண்டவளால் உயர்ந்தவன் மாலங்கோவ்; இன்று குருசேவால் வீழ்த்தப்படுகிருன். அதன் முடிவு என்ன?...எதிர்காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

—நாஞ்சில், செ. அன்பெழில்.

மன்றம் வார இதழின் சந்தா விபரம்



உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	..		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...		20 காசு

முரசொலி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேர்ந்த தூசி அந்த மாடத்தில் அடைந்திருந்தது.

"இதோ, பாருங்கள்!" என்று மாடத்தைச் சுட்டிக் காட்டினாள் அஞ்சுகம்.

"இதோ, பார்!" என்று அதற்குமேல் ஜமீன்தார் சுட்டிக்காட்டினார். அங்கே சிலந்திக்கூடு தொங்கியது.

"இங்கு வரவேண்டாமென்று அதற்குத்தான் சொன்னேன். வேடிக்கை பார்க்கவேண்டுமென்று நீதான் பிடிவாதமாய் வந்தாய். சிலந்திக்கூடுதான் இங்கு வேடிக்கையானது!" ஜமீன்தார் கோபித்துக்கொண்டார்.

கதவுக்கருகில் போய் நின்று "யாரங்கே" என்று அஞ்சுகம் கூபபிட்டாள்.

வேலேக்காரன் வந்து நின்றான். "யாராவது வந்து இந்த அறையைக் கூட்டச் சொல்!" என்று ஜமீன்தாரணி உத்தரவிட்டாள்.

ஜமீன்தார் சிரித்துக்கொண்டார். தன்கையிலிருந்த சிலேயைப்பார்த்தபடி அஞ்சுகம் உட்கார்ந்திருந்தாள்.

நேரமானது. ஆனல் யாரும் வரவில்லே. அஞ்சுகத்தின் கோபம் ஜமீன்தாரிடம் இன்னும் அதிகக் கேலியைத் தந்தது.

ஜமீன்தார் தங்கியிருக்கும் அறையில்-அது மாடியில் இருந்தது. புழுதி படிந்திருக்கிறது என்று வேலேக்காரன் அறிவித்ததும் மணியக்காரர் நடுங்கிப்போனார், மற்றவர்கள் பயந்துபோனார்கள். யாராவது ஒருவர் போய் அதைக்கூட்ட வேண்டும். யாரை அனுப்பலாம்? கடைசியாக மூக்கனின் மகள் வள்ளியை அனுப்புவதெனத் தீர்மானித்தார்கள். அவள் பயத்தால் நகர மறுத்தாள். மற்றவர்கள் தைரியப்படுத்தினார்கள். மணியக்காரரின் மனேவி ஒரு பழையபட்டுப் புடவையை அவள்மீது சுற்றிவிட்டாள். கணக்குப்பிள்ளே வீட்டார் அவள் தலேமயிரை அவசரமாக ஒதுக்கிவிட்டார்கள். அவள் கையில் ஒரு விளக்குமாறை கொடுத்துக் கடைசியாக மேலே அனுப்பினார்கள்.

ஜமீன்தாரணி கோபத்துடன் எழுந்தாள். அவள் வேலேக்காரனேக் கூப்பிட வாயைத் திறந்தபொழுது, வேலேக்காரனும் வள்ளியும் உள் வந்தார்கள். ஜமீன்தாரணியின் கோபம் தணிந்தது, வள்ளியை ஆச்சரியத்துடன் கவனித்தாள். சிற்றூரிலிருந்த அந்த ஏழைப்பெண் அழகுடன் இருப்பது ஆச்சரியத்தை அளித்தது. வள்ளி தரையைப் பார்த்தபடி, அடிமேல் அடி வைத்து உள்ளே போய் நின்ருள். எங்கு கூட்டவேண்டும், என்ன செய்யவேண்டும் என்று அவளுக்குப் புரியவில்லே. நிமிர்ந்து கேட்கவும் பயம். "அந்தத் தூசியைத் தட்டு!" என்று அஞ்சுகம் மாடத்தைக் காட்டினாள்,

வள்ளி தூசியைக் கூட்டி, நன்ருகத் துடைத்து, அறை முழுவதும் பெருக்கி, குப்பையை ஓரத்தில் சேர்த்து, கூடையில் எடுத்துவைத்தாள்.

"உன்னுடைய பெயரென்ன?" வேலேமுடிந்ததும், ஜமீன்தாரணி அவளேக் கேட்டாள்.

"வள்ளி"

பெயர் அவ்வளவு நன்ருக இல்லே! உன்னுடைய அப்பா என்ன செய்கிருர்?"

"மூக்கன். இங்குதான் இருக்கிருர். அப்பாவுக்கு என்ன வேலே என்று அவளுக்குச் சொல்லத் தெரியவில்லே. "மேலே பெரிய டமாரத்தை என் அப்பா அடிப்பார்!" அது அவளுக்குப் பெரிய வேலேயாகத் தெரிந்தது.

"போய் வெளியே இரு, நான் கூப்பிடும்பொழுது வரலாம்!" என்று வள்ளியை அனுப்பிவிட்டு, ஜமீன்தார் பக்கம் திரும்பி "அடக்கவொடுக்கமாக, அழகாக இருக்கிருள்!" என்று அஞ்சுகம் சொன்னாள்.

"இருக்கலாம்!" ஜமீன்தார் அலட்சியப்படுத்தினார்.

"அவளே நான் வேலேக்கு வைத்துக் கொள்ளலாமென்று நினேக்கிறேன்."

"முதலில் ஒரு பளிங்குச் சிலே, இம்பொழுது ஒருபெண் உனக்கு வேலேயில்லே!" என்று ஜமீன்தார் சிரித்தார். மாடத்தில் பளிங்குச் சிலே இருந்தது.

"எனக்குப் பக்கத்திலிருந்து உதவிசெய்ய ஒருபெண் வேண்டும். அதற்கு இவள் ஏற்றவளாயிருப்பாள்."

ஜமீன்தாரணி வெளியில் வந்து, வள்ளியைக் கூப்பிட்டு, தான் அவளே வேலேக்கு வைத்துக்கொள்ளப்போவதாகவும், தன்னுடன் புறப்பட்டு வர வேண்டியிருக்குமென்றும்; அரண்மனேயில் (ஜமீன்தார் மாளிகையில்) அவளுக்குத் தனியான இடமும் வசதிகளும் இருக்குமென்றும் சொன்னாள். "வள்ளி" என்ற பெயர் ஜமீன்தாரணிக்குப் பிடிக்கவில்லே. "வசந்தா!" என்று பெயரை மாற்றினாள். கடைசியாக, "இந்தக்கிழிசல், அழுக்கு ஆடைகளேத் தூரப்போட்டு, நன்ருக உடுத்தி வரவேண்டும்" என்று தன்னிடமிருந்த பழைய புடவைகளில் இரண்டைக் கொடுத்தாள்.

வள்ளி திரும்பிவந்து, நடந்தவைகளேத் தெரிவித்தபொழுது மூக்கனுக்கு அடங்காத மகிழ்ச்சியும் பெருமையும்! அவளது நல்லவேலே அதற்கு முன் அந்தகுடும்பத்தில் யாருக்கும கிடைத்ததில்லே. காலேயில் தான்பட்ட சங்கடத்தைக்கூட மறந்து, மூக்கன்மறந்து மற்றவர்களிடம் தன் மகளுக்குக் கிடைத்துள்ள பெரிய வேலேயைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். "மூக்கன் மகள் வள்ளி ஜமீன்தாரணி அம்மாவுடன் போகப்போகிருள்" என்ற செய்தி பக்கத்துக் குடிசைகளுக்கும் கிராமங்களுக்கும் பரவியது.

எதிர்பார்த்த ஒருவாரத்திற்கு மேலும் ஜமீன்தாரும் ஜமீன்தாரணியும் அங்கு தங்கினார்கள். ஜமீன்தார் நன்ருகச் சாப்பிட்டுத் தூங்கினார். ஜமீன்தாரணி, பக்கத்திலிருந்த, மலே, அருவி ஓடை இப்படிச் சுற்றிப் பார்த்து வந்தார்கள். அவள் வெளியில் போகும்பொழுது, வள்ளி-இப்பொழுது 'வசந்தா' உடன் சென்ருள். அஞ்சுகம் அவளிடம் பிரியம் காட்டி, நடந்துகொள்ள வேண்டிய முறைகளேப்பற்றிச் சொல்லிக் கொடுத்தாள். மேஜையைத் துடைப்பது, புடவைகளே மடித்துவைப்பது, பெட்டியை அடுக்குவது-இந்த வேலேகளே வள்ளி கற்றுவந்தாள். அந்தப் பெட்டிகளேயும் விதவிதமான ஆடை அணிகளேயும் பார்க்கும்பொழுது, சிலசமயங்களில் வள்ளி மெய்மறந்து உட்கார்ந்து தான்போய் வசிக்கப்போகும் "அரண்மனே" எப்படியிருக்குமென்று கற்பனே செய்து பார்ப்பாள். பல அடுக்குமாடிகள், பெரிய கூடங்கள், உயரமான தூண்கள், பளிங்கு தரை, நிலேக்கண்ணுடி, பட்டுகள் வைரங்கள்மின்ன வருவோர் போவோர், குதிரைகள் வண்டிகள், தோட்டங்கள்- அத்தகைய இடத்தில் இருப்பது குதூகலமாகத்தானிருக்கும். ஜமீன்தாரும் ஜமீன்தாரணியும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ஊரிலிருக்கும் மாளிகையைப் பற்றிப் பேச்சு வரும். வள்ளியின் மனதில் இன்னும் ஒரு பகுதி சேர்க்கப்பட்டு, மாளிகைப் பொலிவுடன் விளங்கும்.

ஜமீன்தார்வந்த புதிதில் ஏற்பட்ட பயம் கோட்டையிலிருந்தவர்களுக்கு அடங்கியது. ஜமீன்தார் வேலேயாள் கேட்பவைகளே அனுப்பிவிட்டு மணியக்காரர் நிம்மதியாக இருந்தார். கணக்குப்பிள்ளேத் திரும்பவும் கணக்குப் புத்தகங்களேப் புரட்ட ஆரம்பித்தார். ஜமீன்தார் கூப்பிடும்பொழுது, அவர்கள் போய்க் கேட்டுவிட்டுத் திரும்பினார்கள். காலேயில் முரசை அடிக்கும்பொழுது, மூக்கன் மிகமெதுவாக, கேட்பதற்கு எவ்வளவு இனிமையாக ஆக்கமுடியுமோ அந்த அளவுக்கு, அதைத் தட்டினான். ஜமீன்தாரர்களின் வேலேக்காரர்கள் கணக்குப்பிள்ளேவீட்டில் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடுவார்கள். மாளிகையைச் சுற்றி அமைதி நிலவிவது. உள்ளே ஜமீன்தார் சோம்பல் முறித்து கொட்டாவி விடுவது வெளியில் சில சமயங்களில் கேட்கும்.

ஒருநாள் மாலே அஞ்சுகம் தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தாள். மணியக்காரரும் கணக்கப்பிள்ளேயும் கதவை மூடிக்கொண்டு கணக்குப் புத்தகங்களேச் சரி பார்த்தார்கள். ஜமீன்தாரர் ஒரு வேலேக்காரனிடம் நாயைக்கொடுத்துக் கொஞ்ச தூரம் நடத்தி வரச்சொன்னார். மற்ருெரு வேலேக்காரன் குதிரைக்காரனுடன் பதினேந்தாம் புள்ளி விளேயாடிக்கொண்டிருந்தான்.

"வள்ளி! வள்ளி!" என்று மூக்கன் திரும்பினான் இன்னும் வள்ளி வரவில்லே. "மேலே சென்றவள் இன்னும் ஏன் வரவில்லே." என்று நினேத்தான்.

வந்துவிடுவாள் என்று சமாதானமடைந்தான். ஆனல் மீண்டும் அந்த எண்ணம் வந்தது.

"அவள் அங்கு என்ன செய்கிருள்? ஜமீன்தாரணியம்மா கூடத் தோட்டத்தில் இருக்கிருர்கள்" என்று மூக்கன் யோசித்தான்.

மூக்கன் மெதுவாக மாளிகைக்குள் வந்தான். கீழேயாரும் இல்லே. மாடிப்படிக் கட்டுகளில் அடிமேல் அடிவைத்து ஏறினான். அவனுக்குப்போக விருப்பமில்லே. உத்தரவின்றி போகக் கூடாது என நினேத்தான். ஆனல் அவனேயுமறியாமல், அவன் கால்கள் மேல் நோக்கி அடியெடுத்து வைத்துக்கொண்டிருந்தன. மாடியில் முதல் அறை பூட்டிக்கிடந்தது. இரண்டாவது அறைப் பக்கத்திலிருந்த சன்னல் சிறிது திறந்திருந்தது. உள்ளிருந்து பேசும் குரல் - ஜமீன்தாரின் குரல் கேட்டது.

மூக்கன் உற்றுக் கேட்டான்.

"நான் சொல்வதைக் கேள்! உன்னே அழைத்துக் கொண்டு போய், உனக்கு எல்லாம் தருகிறேன். பட்டாடைகள், அணிமணிகள் எதுகேட்டாலும் உனக்குக் கிடைக்கும். யாருக்கும் தெரியாது, யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள். உன் அப்பாவை வேண்டுமானுல் அழைத்துப்போய் ஒரு வேலே போட்டுத் தருகிறேன். நீ என்ன சொன்னுலும் அதன்படி செய்கிறேன். இதோ! பார், என் கண்ணல்ல! உன்னேப் போன்ற அழகியை நான் இதுவரைப் பார்த்ததே இல்லே."

மூக்கனுக்குப் பேரிடி விழுவதுபோலிருந்தது. முகத்தில் திகைப்பும் பயங்களும் உருவெடுத்தன. குனிந்து, கதவு இருக்கின்ற வழியாக உள் பார்த்தான். உள்ளே வள்ளி நின்றுகொண்டிருந்தாள், அவள் ஒருகையில் பளிங்குச் சிலேயும் மற்ருெருகையில் துடைக்கும் துணியும் இருந்தன. பயமும் வேதனேயும் அவன் முகத்தில் காணப்பட்டன. மிரட்சியுடன் நின்ருள். மற்றநேரங்களில் சோம்பேரியைப்போல தூங்கி வழியும் ஜமீன்தார், பிரகாசிக்கும் கண்களுடன் வெறித்து அவளே

பார்த்துக்கொண்டிருந்தார். பாயப்போகும் புலி பயத்துடன் நிற்கும் ஆட்டைப் பார்ப்பது போல!

மூக்கன் தலையில் இரண்டு கைகளையும் வைத்து அமுத்திக்கொண்டான். என்ன செய்வது? பயங்கர எண்ணங்கள் தலையில் சூழ்ந்தன. சே! கூடாது என்று அந்த எண்ணங்களை உதறித்தள்ளுவதுபோல, கைகளை எடுத்தான். உள்ளே போனால், அவமானம், வேலைக்காரனின்முன் ஜமின்தார் தலைகுனிந்து நிற்பார், மகள் கதறுவாள்! அது சரியல்ல என்று மூக்கன் கீழே இறங்கி வந்தான, ஜமின்தாரரின் வேலைக்காரனை மேலனுப்பினால்போதும். ஆனால் வேலைக்காரர்கள் இருவரையும் காணோம். மணியக்காரர், கணக்கப்பிள்ளை யாரையும் பார்க்க முடியவில்லை. என்ன செய்வது என்று மூக்கனுக்குப் புரியவில்லை. பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. மேலே பார்த்தான். முரசு இருக்கும் மாடம் கண்ணிற்பட்டது. வேகமாக படிக்கட்டுகளில் தாவி ஏறினான், அறைக்கதவைத் தள்ளி, ஒரு பாய்ச்சலில் முரசுக்குப் பக்கத்தில் குதித்து ஓங்கி அடித்தான்.

அறையில், கடைசியாகத் துணிந்து ஜமின்தார் நெருங்கினார், "ஆ!" வென்று வள்ளி அலறினாள், அவள் கையிலிருந்த பளிங்குச் சிலை கீழே விழுந்து சிதறியது. ஜமின்தார் நெருங்கினார். முரசின் சத்தம் கேட்டது. திகைத்து நின்றார்.

மூக்கன் பலங்கொண்ட மட்டும் அந்த முரசை அடித்தபடி நின்றான். அந்தி நேரத்தில் முரசு அடிப்பது கேட்டு, எல்லோரும் ஓடிவந்தார்கள். ஜமின்தாரர்களின் வேலைக்காரர்கள் விளையாட்டுகளை விட்டு வந்தார்கள். மணியக்காரரும் கணக்கப்பிள்ளையும் கணக்குப் புத்தகங்களை அப்படியேப் போட்டு விட்டுப் பதறிப்போய் வந்தார்கள்.

மூக்கன் அடிப்பதை நிறுத்தவில்லை. பலங் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டிருந்தான். அவன் நெற்றியிலிருந்து வியர்வை அரும்பிச் சொட்டியது.

"பைத்தியம் பிடித்து விட்டதா? அல்லது குடித்திருக்கிறானா? ஏன் இப்படி திடீரென்று அடித்துக் கொண்டிருக்கிறான்?" என்று மணியக்காரர் மாடத்திற்கு வந்தார்.

"நிறுத்துகிறாயா இல்லையா? ஜமின்தார் தூங்கிக் கொண்டிருக்கிறார். சத்தம் செய்யாதே இல்லையானால் உன் வேலை போய்விடும்" என்று மணியக்காரர் அதட்டினார்.

"வேலையை விட்டு நீக்க வேண்டாம். மூக்கன் நல்ல திறமைசாலி!" என்ற குரல் வந்தது. திரும்பிப் பார்த்தால், ஜமின்தார் எதிர்ப்பக்கத்தில் கீழிறங்கிக் கொண்டிருந்தார்.

மூக்கன் அடிப்பதை நிறுத்தினான். கூட்டம் விலகி வழி விட்டு நின்றது. ஜமின்தார் கைத்தடியைச் சுழற்றிக் கொண்டு வெளியில் உலாவச் சென்றார்.

முரசு அடிக்கப்படும் சத்தத்தைக் கேட்டதும், தோட்டத்திலிருந்த அஞ்சுகம் திரும்பி வந்தாள். மாடிக்கு வந்து, அறையில் நுழைந்ததும், தான் காப்பாற்றி வந்த அழகானப் பளிங்குச் சிலை உடைந்து கிடப்பதைக் கண்டாள். பக்கத்தில் கண்கலங்க வள்ளி நின்று கொண்டிருந்தாள். அவள் நடுங்கிக்கொண்டு நிற்பதிலிருந்தே, அவள்தான் சிலையை உடைத்திருக்க வேண்டும் என்பதை அஞ்சுகம் ஊகித்துக் கொண்டாள்.

வள்ளி வேலையிலிருந்து நீக்கப்பட்டாள். அவள் மனதில் கட்டப்பட்டிருந்தகோட்டைகள் கண்ணாடி மாளிகைகள், பெரிய இடத்து விருந்து விழாக்கள் எல்லாம் உடைந்து சுக்குத் தூளாகிவிட்டன.

மறுநாள் காலை பத்து நாழிகைக்கெல்லாம் வழக்கம்போல் மூக்கன் முரசைத் தட்டினான். வேலைக்கு வரவேண்டியவர்கள் குடிசைகளை விட்டுப் புறப்பட்டார்கள். மூக்கன் தூரத்திலிருந்த காட்டுப் பாதையைப் பார்த்தான். இரண்டு குதிரைகள் பூட்டிய அழகிய கோச்சு வண்டி வெய்யலில் பளபளத்தது. கோச்சுவண்டி வரவரத் தூரத்துக்குப் போய்க்கொண்டிருந்தது. அது மறைந்தும், மூக்கன் பெருமூச்செறிந்து, கையிலிருந்த கழிகளைப் போட்டான். அவன் முகத்தில் திருப்தியிருந்தது. அறையைவிட்டு வெளியேறுமுன் திரும்பி, முரசைப் பார்த்தான். அவனுக்குப் பின் முரசு அடிக்கும் பழக்கம் இல்லாமற் போய் விடலாம். முரசைப்போலத் தானும் பழங்காலத்தைச் சேர்ந்தவன் என்ற எண்ணம் அவனுக்கு உண்டானது.

அன்றொருநாள் அந்திநேரத்தில்தான் முரசு கொட்டியதற்கான காரணத்தை மூக்கன் யாருக்கும் தெரிவிக்கவில்லை. அந்த இரகசியம் அவனுடனேயே புதைக்கப்பட்டது. ○

கல்வித்துறையில் குழப்பம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாமல் செயல் மூலமாக உழைப்பு மூலமாக அறிவு ஏற்படவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். ஆதாரக் கல்வியால் "உழைப்புக்கு மதிப்பு கொடுக்கும் மனோபாவம் இளம் பருவத்திலேயே ஏற்படவேண்டும்" என்றும் அவர் கூறுகிறார். இத்தகைய ஆதாரக் கல்வி முறை எவ்வளவு பிற்போக்கானது என்பதை 1954 சனவரித் திங்கள் ராசபுதனப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசிய சர். மிர்சா இஸ்மாயில் அவர்கள் பின்வருமாறு தெளிவு படுத்தியுள்ளார்:—

"ஆதாரக்கல்வி முறையில் இரண்டு விதப் பேராபத்துக்கள் உண்டாகின்றன. முதலாவதாக, ஏதாவது சில கைத்தொழில்களைக் கற்றுக்கொள்வதன்மூலம் இளஞ்சிறுவர்கள் விற்பனைசெய்பவல்ல பொருள்களைச் செய்யவேண்டுமென்பது; இரண்டாவதாகப் புத்தகங்களைப் படிப்பதன்மூலம் அறிவு விளக்கம் பெறுகிற முறையைக் குறைத்துக் கொள்ளவேண்டு மென்பது. இந்த இரண்டு கருத்துக்களும், மக்களை நாகரிகப் பாதையிலிருந்து திருப்பி, அநாகரிகத்துக்கு அழைத்துச் செல்வதாகும். மேலும் கல்வித்துறையின் நோக்கத்துக்கு எதிராக, இளஞ்சிறுவர்களையெல்லாம் ஆலைத் தொழிலாளர்களாக மாற்றுவதாகும்."

மக்களின் அறியாமையைப் போக்குவதற்கு குறுக்கு வழிகள் எதுவுங் கிடையாது. அறிவைப் பரப்புகிறக் கல்வியைத் தருவது ஒன்றினால்தான் முடியும். அதைவிட்டுத் தொழிலைப் பரப்புகிற—தொழில் என்றால் பெருந் தொழில்களல்ல, கைத்தொழில் என்றழைக்கப் படும் சிறு வேலைகளைச்செய்யும் ஆதாரக் கல்வியால் முடியாது. உண்மையில் ஆதாரக்கல்வி பெரும் தொழில்களை — விஞ்ஞான முறையில் இயங்கும் தொழில்களை வளரவிடாது. ஆதாரக்கல்வி விரைவான கல்வியையும் தருவதில்லை, உருப்படியான தொழிலையும் தருவதில்லை. இளஞ் சிறுவர்களைக் கைத்தொழிலுக்கு வேண்டிய சிற்றுருக்களாக மாற்றுவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாது. மிர்சா இஸ்மாயில் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஆதாரக் கல்வி மக்களை நாகரிகப் பாதையிலிருந்து திருப்பி, அநாகரிக காலத்துக்கு அழைத்துச்செல்வதாக இருக்கிறது. ●

வண்ணாத்திப் பூச்சிகள் பார்ப்பதற்கு மென்மையாகக் காணப்பட்டபோதிலும், அவைகள் நீண்டதூரம் சோர்வின்றிப் பறந்து செல்லும் ஆற்றலுடையவைகளாக இருக்கின்றன. தோட்டங்களில் பார்க்கும்பொழுது செடிக்குச்செடிப் பறந்துசென்று அமர்ந்து விடுகிறது. ஆனால் சில வண்ணாத்திப் பூச்சிகள் ஆயிரக் கணக்கான மைல்கள் பறந்துவருகின்றன. ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த சிலவகை வண்ணாத்திப் பூச்சிகள் கோடைகாலம் ஆரம்பிக்குமுன் வடக்குநோக்கிப் பறக்கத் தொடங்குகின்றன. மத்தியிலுள்ள மத்தியதரைக்கடலை கடந்து, பிரெஞ்சுநாட்டைத் தாண்டி இங்கிலாந்தை வந்தடைகின்றன. சிலசமயங்களில் இங்கிலாந்தையும் தாண்டி வடகிழக்கில் சென்று ஐஸ்லாந்து சேரும். அவைகள் செல்லும் தூரம் ஆயிரம் மைல்களுக்கு மேலிருக்கும்.

வண்ணாத்திப்பூச்சிகள் நாடுவிட்டு நாடுசெல்லும்பொழுது கூட்டங்கூட்டமாகச் செல்லுமாம், கூட்டமென்றால் பல கோடிக் கணக்கான வண்ணாத்திப் பூச்சிகள் பறந்துபோகும். 1924ல் ஒரு சமயம், பெரிய வண்ணாத்திப் பூச்சிக்கூட்டம் பறந்துவருவதை ஆராய்ச்சியாளர்கள் கணக்கெடுத்தார்கள், அத்தப்படையெடுப்பில் ஏறத்தாழ 300கோடி வண்ணாத்திப்பூச்சிகள் இருந்தனவாம். சுமார் 40மைல் அகலத்துக்குப் பரவி, மணி ஒன்றுக்கு 6 மைல் வேகத்தில் போன அந்தக் கூட்டத்தை ஒருகுறிப்பிட்ட இடத்திலிருந்து பார்த்தால், மூன்று நாட்களுக்குப் போய்க்கொண்டே இருந்ததாம்! மேகக்கூட்டம் செல்வதைப்போல அந்த வண்ணாத்திப் பூச்சிக் கூட்டம் சென்றது. உலகமக்கள் தொகையைவிட அதிகமான அளவு வண்ணாத்திப் பூச்சிகள் அந்த ஒரு கூட்டத்தில் மட்டும் இருந்திருக்கிறது!

இந்தியாவில் வரிச்சுமை!

——(0)——

"உலகிலேயே மிக அதிகமானது"

—பண்டித நேரு

இந்திய அரசாங்கத்தினர் வெளியிடும் கருத்துக்கள் பல சமயங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவைகளாக இருக்கின்றன. ஒரு மந்திரி வெளியிடுவதற்கு மாறுபட்ட கருத்து மற்ருெரு மந்திரியிடமிருந்து வரும்.

"உணவு நிலைமை திருப்திகரமாயிருக்கிறது" என்று ஒரு மந்திரி அறிவிப்பார்; "உணவு நிலைமை திருப்திகரமாக இல்லாததால், அதிக உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது" என்று மற்ருெரு மந்திரி பேசுவார். இரண்டு மந்திரிகளும் மத்தியஅரசாங்கத்தைச்சேர்ந்தவர்கள் தாம். உணவு நிலைமை திருப்திகரமாயிருக்கிறது என்பதற்கு ஒருமந்திரி இலாகா புள்ளிவிவரங்களைத் தரும். உணவு நிலைமை மோசமாகியிருக்கிறது என்பதற்கானப் புள்ளிவிவரங்களை மற்ருெரு மந்திரி வைத்திருப்பார். புள்ளிவிவரங்களைக் கொண்டு மத்திய மந்திரிகள் முடிவுகளை எடுப்பதாகத்தெரியவில்லை. மத்தியமந்திரிகள் எடுத்த முடிவுகளுக்கு ஏற்றவகையில் புள்ளிவிவரங்கள்பொறுக்கப்பட்டிருக்கின்றனவோ என்ற ஐயம் ஏற்படுகிறது. இல்லையானுல் ஒரே நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் வர முடியாது.

கொள்கையளவில் வேறுபாடு இருக்கலாம். ஒன்றின் பலாபலன்களைப் பற்றி மதிப்பிடும் பொழுது மாறுபட்ட கருத்துக்கள் தோன்றலாம். ஆனுல் புள்ளிவிவரங்களை வைத்துச் சொல்லப்படும் கணக்குகளில் மாறுபாடு இருக்கமுடியாது. ஆனுல் இந்திய அரசாங்கத்தில் அத்தகைய மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

1957-58 வரவு–செலவுத் திட்டத்தில் நூறு கோடி ரூபாய் அளவுக்குப் புது வரிகள் போடப்பட்டன. வரிப் பளு அதிகம் என்று காங்கிரசுக்காரர்கள் உள்பட பல கட்சிக்காரர்கள் கண்டன மெழுப்பினுர்கள். வரிப்பளு அதிகமில்லை என்று நிதிமந்திரி கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வாதாடினுர். அது மட்டுமல்ல "உலகத்திலேயே இந்தியாவில்தான் மிகக் குறைவான வரிப்பளு இருக்கிறது" (The incidence of total tax in India is still the lowest in the world) என்று அவர் சொன்னுர்.

ஒரு பெரிய அரசாங்கத்தின் நிதி மந்திரியாக இருப்பவர் அவ்வாறு சொல்லும்பொழுது வரிக்கொடுமை அதிகம் என்று கூறுபவர்களால் எப்படி உடனே மறுக்கமுடியும்? படிப்பவர்களுக்குத்தான் என்ன தோன்றும்? நிதி மந்திரிக்குப் பக்கத்தில் புள்ளிவிவரங்களைத் திரட்டித் தர ஒரு பெரிய இலாகாவே இருக்கிறது, எல்லா நாட்டு வரித்திட்டங்களையும் ஆராய்ந்து பார்த்து அந்த முடிவுக்கு வந்திருக்கிருர் என்று படிப்பவர்கள் நினைத்துக்கொள்ளவேண்டும். மற்ற நாடுகளின் வரிப்பளு எவ்வாறு இருக்கின்றது என்று தெரிந்தால் தானே அது சரியா தவரு என்று நாம் பார்க்க முடியும். மற்றவர்களிடத்தில் புள்ளி விவரங்களோ, புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்கான வசதிகளோ கிடையாது. ஆதலால் நிதி மந்திரியார் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொண்டு "உலகிலேயே இந்தியாவில் தான் வரிப்பளு குறைவென்று நிதி மந்திரி கூறுகிருர். இருந்தாலும் இந்தக் குறைந்த அளவு பளுவைக் கூடத் தாங்க முடியவில்லையே! ஏன்?' என்று யோசித்திருப்போம்.

ஆனுல் நிதிமந்திரிக்கும் பெரிய மந்திரியாக ஒருவர் இருக்கிருர். அவர்தான் பிரதமமந்திரி, பாரதரத்தின பண்டிதநேரு! மாருன கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். அண்மையில் காமன்வெல்த் பிரதமர்களின் மாநாட்டுக்குப் போயிருந்த பொழுது இலண்டனில் பத்திரிக்கை நிருபர்களுக்குத் தந்த பேட்டியில் பின்வருமாறு அவர் கூறியுள்ளார். "எங்களால் முடிந்தவரை முயன்று பார்க்கிருேம், உலகிலேயே எங்கள் நாட்டில்தான் அதிகமான வரிச்சுமை இருக்கிறது" (We are stretching ourselves to the utmost and our taxation is perhaps the highest in the world).

ஒருவர் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர் மற்ருெருவர் எதிர்க்கட்சியில் இருப்பவர் என்ருே, ஒருவர் இந்த நாட்டவர் மற்றவர் அயல் நாட்டவர் எனவே நிலைமை அறியார் என்ருே, கூறிவிடமுடியாது. இருவரும் இங்கிருக்கிருர்கள், ஆளும் பொறுப்பில் இருக்கிருர்கள், ஒருவர் நிதிமந்திரி, மற்ருெருவர் பிரதமமந்திரி! ஒரே மந்திரிசபையைச்சேர்ந்த இரண்டு முக்கியமான மந்திரிகளும் மாறுபாடான கருத்துக்களைத் தருகிருர்கள்.

"உலகிலேயே இந்தியாவில் தான் வரிப்பளு குறைவானது" என்று நிதிமந்திரி கூறுகிருர், "உலகிலேயே இந்தியாவில்தான் வரிப்பளு அதிகமானது" என்று பிரதம மந்திரி அறிவிக்கிருர்.

யார் சொல்வது சரி? யார் சொல்வதை நம்புவது?

மத்திய அரசாங்கத்தின் புள்ளிவிவர இலாகா ஒரேவிதமான புள்ளிவிவரங்களைத்தான் இரண்டுபேருக்கும் தந்திருக்க முடியும்!

சிறிது ஏற்றத்தாழ்வு என்ருல்கூட விட்டுவிடலாம். "உலகிலேயே குறைவானது" என்று நிதிமந்திரியும், "உலகிலேயே அதிகமானது" என்று பிரதம மந்திரியும் இரண்டு கோடியில் நின்று அல்லவா கூறுகிருர்கள்.

ஆக குழப்பமான நிலைமை இருக்கிறது, குறைபாடான திட்டங்களைப் போடுகிருர்கள், சமயத்திற்கேற்ருற்போலகருத்துக்களை மாற்றிச் சொல்கிருர்கள். "உலகிலேயே இங்குதான் வரி குறைவானது" என்று நிதிமந்திரி கூறியபொழுது; வரிகளைப் போடும் சமயம்! அப்படிச் சொன்னுல்தான் புதிய வரிகளை ஏற்றுக்கொள்வார்கள்.

"உலகிலேயே எங்கள் நாட்டு வரிதான் அதிகமானது" என்று பண்டிதநேரு இலண்டனில் கூறியதற்குக் காரணம், அங்கு அவர் கடன் கேட்கப் போயிருந்தார். எங்களால் முடிந்தவரை வரிகளைப்போட்டு விட்டோம் என்று நம்பச்செய்தால்தான், அவர்கள கடன் கொடுக்க முன்வருவார்கள்!

இந்திய அரசாங்கத்தின் புள்ளிவிவரங்கள், கணக்குகள் இடத்திற்கேற்றபடி, சமயத்திற்கேற்றபடி மாறுபாடடைகின்றன. ○

(2-ம் பக்கத் தொடர்ச்சி

யினராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களில், யார் யாருக்கு எந்தெந்த துறையிலே அதிக ஆர்வம் இருக்கிறதோ, அவர்கள் அந்தத் துறையிலே ஆலோசனைகள் சொல்லக் கூடிய விதத்தில், அவர்களுடைய கருத்துக்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்கக் கூடிய முறையில், கலந்து பேசி, நல்ல முடிவு எடுக்கும் விதத்தில், அப்போதைக்கப்போது தனித் தனிக் குழுக்கள் அமைத்துக் கொள்வோமானுல் மேல்சபை தேவைப் படாது. ஆனுல், மேல்சபை உறுப்பினர்கள் சட்ட மன்றத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் வரட்டும்; ஜில்லாபோர்டுகள் அல்லது லோகல் போர்டுகள் சார்பாகப் பிரதிநிதிகள் வரட்டும்; மிகப்பெரிய அறிஞர்கள், நுண்ணறிவாளர்கள் இந்தமன்றத்திற்கு வரட்டும். அது எண்ணிக்கையை ஓர் அளவுக்கு அதிகரிக்கக்கூடும். ஆனுல், சட்ட மன்றம் ஒன்று போதும், இரண்டு தேவையில்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தெரிவித்துக்கொள்ளும்போது-அமைச்சர்கள் எண்ணக்கூடும்-இங்கு 205 பேர்களுக்குத் தானே இடம் இருக்கிறது; 205க்கும் அதிகமான எண்ணிக்கைக்கு இடமளிக்கச்சொல்வது மவுண்ட்ரோடு மண்டபத்துக்குக் கூப்பிடுவதற்கோ என்று. நாங்கள் கூப்பிட்டாலும், கூப்பிடாவிட்டாலும், நாட்டுமக்கள் கூப்பிடத்தான் போகிருர்கள். இந்த இடம் எப்படிப் போதும்-அடுத்த தேர்தலுக்குப்பிறகு? இந்த நாட்டு மக்களுச்கெல்லாம் பிரதிநிதித்துவம் உடையதாக இந்த மன்றம் இருக்கவேண்டுமானுல், ஏறத்தாழ 75ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் பேர் அளவிற்கு ஓர் உறுப்பினர் வீதம் இந்த மன்றத்திலே இருக்க வேண்டும். ஏறத்தாழ தமிழ் நாட்டினுடைய மக்கள்தொகை மூன்று கோடி. இந்த மூன்று கோடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமானுல், ஏறத்தாழ 300 பேர்கள்-உறுப்பினர்கள் - இந்தச் சட்டமன்றத்திலே இடம்பெறவேண்டும். எல்லா மக்களுடைய கருத்தையும் எடுத்துச் சொல்லும் வாய்ப்பு-அது எந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் அதிகம் ஆகிறதோ, அந்த அளவுக்குத் தான் அதிகமாகும். அந்த முறையிலே எண்ணிப் பார்த்தால், அடுத்த தடவை பொது தேர்தல் நடைபெறுகிற போதே, நாட்டு மக்களுக்கு நீதி செய்வதாக இருந்தால்; நாட்டு மக்களின் தேவைகளைத் திறம்பட மன்றத்தில் எடுத்துறைப்பது 300 பேர்கள் இருப்பதற்கு இடம் தேவை. அந்த வகையில் பார்த்தால், மவுண்ட்ரோடிலுள்ள சட்டமன்றக் கட்டிடம்தான் நமக்குத் தேவைப்படும்.

அதற்குள்ளாகவே மத்திய சர்க்காருக்கு அந்தக் கட்டிடத்தை வாடகைக்கு விட்டு, பத்து இருபது ஆண்டுகளுக்கு அது அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு, அதைத் திரும்பக் கேட்கும் நேரத்தில், மத்திய சர்க்கார் எத்தனையோ காரியத்திலே சொன்னது போல்; "இல்லை" என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. அதனுலேயேநான் தெரிவித்துக் கொள்வேன். நம்முடைய சட்டமன்றம ஜனநாயகத்தை வளர்க்க ஒரு வாய்ப்பாகப் பயன்படுகிற முறையிலே இந்த மன்றத்தார்-இல்லை; இந்த மன்றத் தலைவர் அவர்கள்-அதற்குத் துணையாக இருக்கவேண்டும்.; பொறுப்புள்ள ஆளும் கட்சியினரும் இந்தக் கருத்தை ஏற்றுச் செயலாற்ற வேண்டும். ○

அரசாங்கச் சிக்கனம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் தங்கள் சம்பளத்தில் பகுதியை விட்டுக் கொடுத்துள்ளார்கள். ஏதோ ஒரு ஊரில் இருக்கும் தபால்காரன் கூடத் தான் வாங்கும் சம்பளத்தில் சிறிதளவைக் கொடுக்க சம்மதித்துள்ளதாகப் பத்திரிக்கைச் செய்திகள் வந்தன.

இத்தகைய சிக்கனங்கள், செலவுக் குறைப்புகள் வரவேற்கத் தக்கவையே! ஆனால் இந்தச் "சிக்கனங்களை" மட்டும் பார்த்துவிட்டு நாம் திருப்தியடைந்து விட முடியாது. இவர்கள் செய்துள்ள சிக்கனங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால்கூட சில லட்சங்கள்தான் மிச்சம் பிடித்த கணக்குத்தெரியவரும். ஆனால் வீணாக விரயமாக்கப் படும் பணமோ கோடிக்கணக்கில் இருக்கும்.

ஐந்து இட்லியைக் குறைத்துக் கொண்டவன் வேறு சமயத்தில் மேற் கொண்டு ஆறு இட்லியைச் சாப்பிட்டது போல ,சிலரது சம்பளக் கணக்கில் பத்தில் ஒரு பங்கை மிச்சம் பிடித்துக் காட்டும் அரசாங்கம் வேறு வழிகளில் மிச்சம் பிடிக்கப்படுவதைப்போல பல மடங்கு அதிகமானச் செலவுகளைச் செய்கிறது.

சிக்கனத்தின் பெயரால் சில லட்ச ரூபாய்கள் மிச்சம் காட்டப் படுகின்றன, ஆனால் அரசாங்க நிருவாகத்தில் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் போய்க் கொண்டிருக்கின்றன. ஆடம்பரத்தால், அவசர புத்தியால், ஊழலால், உதாரித்தனத்தால் பல கோடி ரூபாய்கள் வீணாகப் போகின்றன.

சில செலவுகளைக் கட்டுப்படுத்தலாம், சில செலவுகளில் சிக்கனம் காட்டலாம்.

வெள்ளைக்காரன் காலத்தில் ஆடம்பரமென்றும் அநியாயமென்றும் தூற்றப்பட்ட பல செலவுகள் காங்கிரசின் சுதந்தர ஆட்சி ஏற்பட்டும் நீடிக்கின்றன, முன்பிருந்ததைவிட அதிகமாகியுள்ளன. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த இராணுவச் செலவு கடுமையானது என்று காங்கிரசுக்காரர்கள் கண்டித்தார்கள். அப்பொழுது இருந்த இராணுவச் செலவு 50 கோடி ரூபாய்க்குக் குறைவாக! 50 கோடி ரூபாய்ச் செலவை அதிகமென்று வாதாடியவர்கள் இப்பொழுது 250 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவு செய்கிறார்கள்.

ஆண்டுதோறும் இராணுவச் செலவு அதிகம் என்பதை நாம் மட்டுமல்ல, காங்கிரசுத் தலைவர்களில் சிலரும் உணருகிறார்கள். காங்கிரசின் தலைமைக்கு அப்பாற்பட்டு இருப்பவர்கள் வெளிப்படையாகச்சொல்லியும் இருக்கிறார்கள். காந்தியாருக்குப்பின் இந்தியாவின் உத்தமராக விளங்கும் வினோபா அவர்கள் "பட்டாளச் செலவைப் பாதியாகக் குறைக்கவேண்டும்" என்று கூறியுள்ளார்.

மற்றவர்கள் கூறும்பொழுது "நாட்டின் நாசகாலர்கள் சொல்லுகிறார்கள்" என்று தள்ளி விட்டால் கூட, நாட்டின் உத்தமராக விளங்கும் வினோபா அவர்கள் கூறுவதையாவது காங்கிரசு அரசாங்கம் ஏற்று நடக்கலாம்.

பட்டாளத்துக்கு ஆகும் செலவில் பெரும் பகுதி, காண்டராக்டர்களின்மூலம் ஆகிறது. சாமான்கள், தளவாடங்கள், உடைகள் எல்லாம் காண்டரக்டர்கள் மூலம் வாங்கப்படுகின்றன. இராணுவக் காண்டரக்டர்கள் எவ்வளவு கொள்ளை இலாபங்களை அடைகிறார்கள் என்பதைச் சண்டைக் காலத்தில் தென்னாட்டினர் ஓரளவு தெரிந்திருப்பார்கள். இப்பொழுது செலவாகும் இராணுவப் பணத்தின் பெரும் பகுதி வடக்கில் செலவிடப் படுவதால், தென்னாட்டில் அதன் அளவு தெரிவதில்லை. இராணுவ காண்டரக்டுகளின் மூலம் விரயமாகும் பணம் பல கோடி ரூபாய்கள் இருக்குமென்று நிச்சயமாகக் கூறலாம். இந்தக் காண்டராக்டு கொள்ளைகளை ஒழித்தாலே, அரசாங்கத்துக்குக் கோடிக்கணக்கில் பணம் மிச்சமாகும்.

மத்திய அரசாங்க நிருவாகத்திற்கு ஏராளமாகப் பணம் செலவாகிறது. மொத்தம் ஆகும் செலவில் 100க்கு 40 பங்கு நிருவாகச் செலவில் போய்விடுகிறது. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததைப்போல பல மடங்கு அதிகமான செலவு இப்பொழுது ஆகிறது.

வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு வைசிராயும் ஆறு ஆலோசகர்களும் நிர்வாகத்தை நடத்தினார்கள். அப்பொழுது இந்தியாவும் பாக்கிஸ்தானும் ஒன்றாக இருந்த சமயம். இரண்டும் பிரிந்தபின், இந்தியாவுக்கு மட்டும் தற்பொழுது 1 குடியரசுத் தலைவர், 1 துணைத்தலைவர், 1 பிரதமர் இவர்களையல்லாமல் 40 மந்திரிகளும் உதவி மந்திரிகளும் இருக்கிறார்கள்.

விடுதலை பெறுவதற்கு முன் மத்திய அரசாங்கத்தில் 7 செகரடரிகளும் 100 ஆபீசர்களும் இருந்தார்கள். இப்பொழுது 37 செகரடரிகள், 110 ஜாயின்ட் செகரடரிகள், 250 டெபுடி செகரடரிகள், இவர்களையல்லாமல் பல நூற்றுக் கணக்கில் ஆபீசர்களும் இருக்கிறார்கள்.

இவ்வளவு அதிகாரிகள் கூட்டம் போதாதென்று, மேலும் 100 ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கப் பரிட்சை நடத்தியுள்ளார்கள்.

ஒரு புறம் சிக்கனம் பேசுகிறார்கள், மறு புறம் இராணுவமும், நிர்வாகத்தில் செலவு இலாக்காக்கள் செய்யும் தாறுமாறான செலவுகளும் பல கோடிக்கணக்கில் அரசாங்க பணத்தை விழுங்கிக் கொண் டிருக்கின்றன. அரசாங்க பணமென்றால் வேறு எங்கிருந் தும் வந்துவிடவில்லை, மக்க ளிடமிருந்து எடுக்கப்படும் வரிப்பணம்தான்! மந்திரி களின் சம்பளத்தில் பத்தில் ஒரு பகுதி குறைப்பது என் பவைகள் விளம்பரத்துக்காக பயன்பட்ட போதிலும், உண் மையான சிக்கனம் வேண்டு மென்றால் இராணுவச் செல வையும் நிர்வாகச் செலவுகளை யும் கட்டுப்படுத்த வேண்டும்.

பத்தில் ஒரு பங்கு சம் பளத்தை ஓரிடம் மிச்சப் படுத்தி, மிச்சமாவதைப்போல பத்து மடங்கு அதிகமான பணத்தை வேறொருபக்கம் வீணாக்குவதில் அர்த்தமில்லை.

ஓரிடத்தில் ஐந்து இட்லி களைக் குறைத்துக்கொள்ள பழக்கப்பட்டவன் வேறொரிடத் தில் ஆறு இட்லிகளைச் சாப் பிடுவதுபோல, அரசாங்கம் நடந்துகொள்கிறது. பத்து இட்லியைத் தின்றாலும் அ... திப்பட வேண்டியிருக்கிறது சாப்பிட ஏதுமின்றி பட்டினி யால் அவதிப்படுபவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள்.

அரசாங்கம் போடுகின்ற சிக் கன முயற்சிகள் வெறும் விள பரத்துக்கு உதவுகிறது. ப... வகைத் திட்டங்களில் நடை பெறும் ஒழுங்கீனங்கள், ஊழ கள் கோடிக்கணக்கான பண தைச் "சாப்பிட்டுக்" கொண் டிருக்கின்றன. கடுகுகளை எண் ணிப் பார்த்துக்கொண்டிருந் விட்டு, பூசனிக்காய்கள் மறை வதைப் பாராமல் இருந்துவி வது தவறு; பார்த்தும் ட... ததுபோல் இருந்துவிடுவ குற்றம்!

நாட்டின் பொருளாதா புரையோடிப்போன புண்ணை போலிருக்கிறது. அ... மறைக்க மேலுக்குப் பூ பூசினால் போதாது. விளம்ப படுத்தும் சிக்கனங்கள், பூ கைப்போல நன்றாக இருக் றன. ஆனால் அதைக்கொ சீர்கேடடைந்துள்ள பொ ளாதாரத்தைத் திருத்தி முடியாது!

இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கும், வெளி நாடுகளிலிருந்து இந்தியாவுக்கும் பல தூது கோஷ்டிகள் போகவும் வரவும் இருக்கின்றன. விளையாட்டு, கலை, நடனம், சினிமா இது போன்று பல குழுவினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் வரவழைக்கவும் இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவைகளுக்கு ஆகும் செலவு 2¼ லட்சம் 50 ஆயிரம் ரூபாய்கள்!

1857ல் நடந்த சுதந்தரப் போரின் வரலாற்றை எழுத இந்திய அரசாங்கம் ஒரு குழுவை அமைத்தது. 1857 போராட்டம் எத்தன்மையது எப்படி ஆரம்பித்தது ஏன் ஆரம்பித்தது என்பதிலேயே குழுவிலிருந்த வரலாற்றாசிரியர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒவ்வொருவரும் தம்தம் கருத்துக்களை வலியுறுத்தினார்கள். ஒரு முடிவுக்கு வரவில்லை, வரலாறு எழுதப்படவில்லை, அமைக்கப்பட்ட குழு மட்டும் இன்னும் அப்படியே இருக்கிறது. இந்த வகையில் அரசாங்கத்திற்கு இதுவரை ஏற்பட்டுள்ள செலவு 15 லட்சம் ரூபாய்கள்!

—கரண்ட்.

தாயும் — சேயும்!



வைத்த கண் மாறாமல் இளம் சேயை பார்த்துப் பரவசமடையும் தாய். "மானிடர் குடும்பம்" கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த படங்களில் ஒன்று.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண்: 5